egistered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU


பிரேம் அச்சகம்
127, KKS Road
யாழ்ப்பாணம்

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 17 சனிக்கிழமை (01.03.2014) பக்கங்கள் 20 ஓசை - 151

12



அசிரத்தை

18



இணைவு

## சென். ஜோண்ஸ் கல்லூரி மீது விசமிகள் தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

சென். ஜோண்ஸ் கல்லூரியின் அலுவலகம் மீதும் கல்லூரிக்கு எதிராகவுள்ள குருவானவர் இல்லம் மீதும் நேற்றிரவு இனந்தெரியாதவர்கள் கல் வீசித் தாக்குதல் நடத்தியதில் பாடசாலை அலுவலகத்தின் கண்ணாடிகள் உடைந்து வீழ்ந்ததுடன், குருவானவரின் வீட்டின் முன்பக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## குற்றச்செயலில் ஈடுபட்டிருந்தால் ஆதாரங்களை சமர்ப்பியுங்கள்

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அதற்குரிய ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

மூன்று வருடங்களுக்குப் பின்னர் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படுகின்ற போதிலும் அதற்கான ஆதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

போருக்குப் பின்னரான மீள் கட்டுமானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் அரசு அனைத்தையும் செய்துள்ளது. அதேவேளை ஐ.நா. மனித உரிமைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்கும் அமெரிக்கா


### வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி தெரிவிப்பு

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவை வழங்கும் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவின் 2013 ஆம் ஆண்டுக்கான உலக மனித உரிமைகள் நிலைவரங்கள் குறித்த அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் மக்களின் சார்பில் அமெரிக்கா என்றும், எந்த விதமான தயக்கமும் இன்றி தொடர்ந்து பேசும். தமது உரிமைகளுக்காக குரல் எழுப்ப முடியாமல் தவிக்கும் மக்களுக்காக பல சந்தர்ப்பங்களில் நாங்கள் குரல் கொடுத்து வந்துள்ளோம் என்று கூறிய அமெரிக்க வெளியுறவுச் செயலர், அது இலங்கைக்கும் பொருந்தும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையில் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்துக் கான அடிப்படைக் கோரிக்கைகளுக்கு அந்த நாட்டு அரசாங்கம் இன்னமும் உரிய பதிலை



அளிக்காமல் இருக்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கையில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் வருத்தத்துக்குரிய வகையில் இன்னமும் தொடருகின்றன என்று குறிப்பிட்ட அவர், இந்த நிலைமைகள் குறித்த தமது தொடர்ச்சியான கவலைகள் காரணமாக அமெரிக்கா மார்ச் மாதம் வரவிருக்கும் இலங்கைக்கு எதிரான மற்றுமொரு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானத்தை ஆதரிக்கவுள்ளது என்றும் தெரிவித்தார்.

## ஜெனிவாத் தீர்மானத்தில் வாக்களிக்காது ஜப்பான்?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில் ஜப்பான் வாக்களிக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் இலங்கைக்கு ஆதரவாகவோ அல்லது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு ஆதரவாகவோ செயற்படாது என தெரிவிக்கப்படுகிறது.

வாக்களிப்பு நடத்தப்பட்டால் வாக்களிப்பில் பங்கேற்காதிருக்க திட்டமிடப்பட்டுள்ளதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கா அறிக்கை நிராகரித்தது அரசு

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்தர மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையின் ஊடாக இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சமாதானம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதல் போன்ற செயற்பாடுகளுக்கான தெளிவான செயல் முறைகளை மேற்கொண்டுள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டு நியாயமற்றது எனத் தெரிவிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

# 9 மனித எச்சங்கள் மூங்கிலாறில் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறு பகுதியில் ஒன்பது மனித எச்சங்கள் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளன.

விவசாய நடவடிக்கைக்காக விவசாயி ஒருவர் தனது காணியினை நேற்று முன்தினம் உழுத வேளை ஓரிடத்தில் மனித மண்டையோடு வெளிப்பட்[illegible]

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டமைக்கு அமைய குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் மனித எச்சங்கள் காணப்பட்ட இடத்தினை அடையாளப்படுத்தி பாதுகாப்பு வழங்கினர்.

பின்னர் முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதிபதி பரஞ்சோதி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சின்னையா சிவரூபன் ஆகியோரின் முன்னிலையில் மனித எச்சங்கள் காணப்பட்ட இடம் தோண்டப்பட்டு ஒன்பது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் இறுதி யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இப்பிரதேசத்தில் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டனர். அத்தோடு யுத்தம் இடம்பெற்ற நேரத்தில் மூங்கிலாறு பகுதியில் இடம்பெயர்ந்து வந்த மல்லாவி வைத்தியசாலை இயங்கியது.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாவில் பதில் தீர்மானம் நிறைவேற்றாது அரசு

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அம்ர்வுகளில் பதில் தீர்மானம் எதனையும் நிறைவேற்றப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க சூழ்ச்சித் திட்டமே நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### ஐ.தே.க. மீது அமைச்சர் வாசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக்கெதிரான அமெரிக்க சூழ்ச்சித் திட்டத்தின் ஓர் கட்டமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கருத வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களில் அமெரிக்காவினை தலையீடு செய்ய வைக்கும் நோக்கில் இவ்வாறு நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே
க.பொ.த (சா/த) விஞ்ஞான பாட விசேட செயற்றிட்டம்

# ஊற்றுப்புலம் மக்களுக்கு அரசசேவை எட்டாக்கனி

## கிராம அலுவலரை சந்திப்பதே படு சிரமம்

### விமோசனமின்றி மக்கள் ஏக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான ஊற்றுப்புலம் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு அங்கு நீண்ட காலமாக கடமையில் இருக்கும் கிராம அலுவலர் பெரும் தடையாக இருப்பதாக கிராம மக்களும், பொது மக்கள் அமைப்பு பிரதிநிதிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேலாக ஊற்றுப்புலத்தில் கிராம அலுவலராக பணியாற்றி வரும் குறித்த கிராம அலுவலர் அனைத்து விடயங்களிலும் பாரபட்சமாகவும் முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகின்றார் என குற்றம் சாட்டும் மக்கள் அங்குள்ள அரச காணிகள் பலவற்றை பணத்திற்காக வசதியானவர்களுக்கு வழங்கி வருகின்றார் எனவும் ஆனால் ஊற்றுப்புலம் கிராமத்தில் நிரந்தரமாக வதியும் பலர் காணியில்லாமல் வாழ்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் கிராமத்தில் காணப்படுகின்ற கிறிஸ்தவ ஆலயத்திற்கு அருகில் உள்ள ஒரு ஏக்கர் காணியினை கையகப்படுத்தி சில மாதங்களுக்கு முன்னர் அந்த ஆலயத்திற்கு அருகில் உள்ள ஒருவருக்கு மூன்றரை இலட்சத்துக்கு விற்றுள்ளதாகவும் அதற்கான ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாகவும் கிராம மக்கள் அமைப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

இதனை விட அதே இடத்தில் தனது மனைவியின் பெயரில் இன்னுமொரு காணியினை பதிவுகளை மேற்கொண்டு தன் வசப்படுத்தியிருக்கின்றார். இவ்வாறு பல காணிப்பிணக்குகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் இவர் வீட்டுத்திட்டம் தொடர்பிலும் மக்களின் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கின்றார். கடந்த காலங்களில் நேர்ப் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் இந்திய வீட்டுத் திட்டம் போன்று புள்ளியிடல் முறையின்றி கிராம அபிவிருத்திச் சங்கமும், கிராம அலுவலரும் இணைந்து பயனாளிகளை தெரிவு செய்வது மூலம் வழங்கப்பட்டது.

இதன் போது அக்காலப் பகுதியில் ஊற்றுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இருந்தவர்களும் கிராம அலுவலரும் இணைந்து பாரபட்சமான முறையில் வீட்டுத்திட்ட பயனாளிகளை தெரிவு செய்து வழங்கியதன் மூலம் தற்போது அங்கு பல மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களின் முறையற்ற பயனாளிகள் தெரிவு காரணமாக வீட்டுத்திட்டங்களைப் பெற்று வீடுகளைக் கட்டியவர்களின் பல வீடுகளில் மக்கள் குடியிருக்காமல் பாழடைந்து காணப்படுகிறது எனவும் ஆனால் அந்த வீடுகளுக்கு அருகில் இன்றும் தற்காலிகக் கொட்டில்களில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் இந்த நிலைமையினை கிராமத்திற்கு வருகை தருபவர்களால் நேரடியாக அவதானிக்க முடியும் எனவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேலும் கடமைநேரங்களில் கிராம அலுவலரின் அலுவலகத்தில் அவரைச் சந்திக்க முடியாமை, மக்களுக்கு கிடைக்க வேண்டிய உதவித் திட்டங்களை விரைவாகவும் பொருத்தமானவர்களுக்கும் கிடைக்கவிடாமல் தடுப்பது, என கிராமத்தின் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் தடையாக இருப்பதனால் கிராம அலுவலரை இடமாற்றி தற்போது பல்வேறு தரப்புகளின் உதவிகளுடன் படிப்படியாக முன்னேறி வரும் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்குமாறு மக்களும் மக்கள் அமைப்புகளும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர். (29)

## கௌரவிப்பு

நல்லூர் பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும் லயன் சீமாட்டி திருமதி ராகினிக்கு கௌரவிப்பு விழா இன்று காலை 10 மணிக்கு தியாகி அறக்கொடை நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மேலதி அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

## சமுர்த்தி பயனாளிகளுக்கு முத்திரைக் கொடுப்பனவுகள்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி சமுர்த்தி வங்கிச் சங்க ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் சமுர்த்தி முத்திரைக்கொடுப்பனவுகள் பெறாதவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

வட்டக்கச்சி சமுர்த்தி வங்கிச் சங்க எல்லைக்குட்பட்ட பிரதேசங்களான இராமநாதபுரம், மாவடி அம்மன், மாயவனூர், வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், பன்னங்கண்டி, மருதநகர், திருவையாறு, திருவையாறு மேற்கு, கனகாம்பிகைக்குளம், அம்பாள் நகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி பயன்பெறும் பயனாளிகள் இதுவரை கொடுப்பனவுகளை பெறாதவர்கள் கொடுப்பனவுகளை பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மான் வேட்டை; இருவருக்கு தண்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்மடு நகர்ப்பகுதியில் புலுட்டைமான் ஒன்றினை இறைச்சிக்காக வேட்டையாடிய இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர் காட்டுப்பகுதியில் கடந்த 18 ஆம் திகதி புலுட்டை மான் என்ற காட்டு விலங்கினை இறைச்சிக்காக வேட்டையாடிய இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்து திருத்தியமைக்கப்பட்ட விலங்குவதைச்சட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்து மன்றில் ஆஜர்ப்படுத்தியிருந்தனர். குறித்த இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (கே)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை கூட்டுறவு நலவிருத்திச் சங்கத்தின் 59 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9.30 மணிக்கு மருத்துவச் சிகிச்சைப் பகுதியில் இப்பொதுக்கூட்டம் இடம்பெறுமென அதன் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## "மொழிமுனை - 2014" விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் பேச்சுத்திறனையும், சிந்தனை ஆற்றலையும் வளர்த்தெடுக்கும் முகமாக இலங்கை தமிழ் விவாதிகள் கழகம் நாடளாவிய ரீதியிலான விவாதச் சுற்றுப்போட்டியினை 'மொழி முனை - 2014' என்னும் பெயரில் நடாத்திவருகின்றது.

அதன் ஓர் பகுதியாக யாழ்.மாவட்ட தெரிவுப்போட்டியினை இளைஞர் இலக்கிய மன்றத்துடன் இணைந்து நாளை யாழ். இந்துக்கல்லூரியில் நடாத்தவுள்ளனர்.

மேற்படி போட்டிக்கு சமுகமளிக்கும் பாடசாலைகளை காலை 8.30 மணிக்கு முன்னதாக வருகைதருமாறு மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், இளைஞர் இலக்கிய மன்றத்தலைவருமான ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ கேட்டுக்கொண்டுள்ளார். புதிதாக போட்டியில் பங்கேற்கவிரும்பும் பாடசாலைகளும் தொடர்பு கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 077 6960063.

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் வருடாந்த உற்சவத்துக்கு ஏற்பாடு

(கரைச்சி)

வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் உற்சவம் மிகச் சிறப்பாக முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகி 17 ஆம் திகதி பங்குனி உத்தரத்தில் பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இதில் விளக்கு வைத்தலை தொடர்ந்து பாரம்பரிய முறைப்படி இந்தப்பிரதேசத்திலே விளைகின்ற நெல் மற்றும் தானியங்களை மாட்டு வண்டியில் யாழ்ப்பாணம் தென்மராட்சி புத்தூர் சந்திக்கு எடுத்து சென்று அங்கே அவற்றைக் கொடுத்து பொங்கலுக்குரிய பண்டங்களை எடுத்துச் வருகின்ற மரபு பேணப்பட்டு வருகின்றது. அதே போன்று இவ்வருடமும் பண்டம் எடுத்து வரப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலய பொங்கலுக்குரிய முன்னோடிக் கலந்துரையாடல் நடைபெற்று அதற்கமைவாக உரிய பொறுப்புக்கள் உரிய நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு அதிகளவான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (கே)

## நல்லூரில் யோகா பயிற்சி; நாளை அறிமுக நிகழ்வு

யாழ்.யோகா அரங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நாளை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யோகா வகுப்புக்கள் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை தினமும் நடைபெறும். பயிற்சிக் காலம் 2 மாதங்களைக் கொண்டதாகும். ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணயாமம், தியானம் மற்றும் தளர்வு பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசிரியர்களால் நுட்பமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன், கையேடுகளும் வழங்கப்படும்.

யோகாசன செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சர்வதேச யோகா நிறுவனம் ஒன்றிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன், அவர்களின் பெயர் விபரங்கள் நிறுவன் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். ஆர்வமுடையவர்கள் அனைவரும் இணைந்து பயன்பெறலாம் என்று யாழ்.யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## குறுந்திரைப்படம் நாளை வெளியீடு

தினேஸ் ஏகாம்பரத்தின் 'அணுகுண்டு' குறும் திரைப்படம் நாளை மாலை 3 மணிக்கு சுதுமலை சிம்மயபாரதி வித்தியால்யத்தில் வெளியிடப்படவுள்ளது.

சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழக வெளியீட்டு அனுசரணையுடன் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவில் கௌரீசனின் இயக்கத்தில் வெளியாகும் 'கூலி', '19 - 29' ஆகிய குறும்படங்களும, சயன் இயக்கத்தில் 'சிந்தனை செய்' என்னும் குறும்படமும் வெளியிடப்படவுள்ளது. மேலும் 'அம்மா பாடல்' என்னும் இறுவட்டும் வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளது.

இ.ரஞ்சித் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பண்டிதர் க.ஈஸ்வரநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

பாடகர் எஸ்.ஜி.சாந்தன், இயக்குனரும் திரைப்படத் தயாரிப்பாளருமான கவிமாறன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (120)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1038

திகதி 27.02.2014

வெற்றி எண்கள்: 04 10 21 38 — ஆங்கில எழுத்து: V

ஜக்பொட் பரிசு ரூ. 2,31,21,320/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,31,21,320/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | ரூ. 7,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 245 | 1,000/= | ரூ. 2,45,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 438 | 1,000/= | ரூ. 4,38,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 10933 | 60/= | ரூ. 6,55,980/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5717 | 40/= | ரூ. 2,28,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 142895 | 20/= | ரூ. 28,57,900/= |
| ஆங்கில எழுத்து | 20752 | 20/= | ரூ. 4,15,040/= |
| | | மொத்தம் ரூ. | 65,90,600/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 705813234-2-32 |
| புத்தளம் | 705801477-9-39 |
| குருநாகல் | 705800475-7-17 |
| மன்னார் | 705804558-8-38 |
| திருக்கோணாமலை | 705813501-7-07 |
| களுத்துறை | 705806914-2-42 |
| மட்டக்களப்பு | 705810846-5-35 |
| கண்டி | 705802684-1-11 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,90,600/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 23,401,180/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.03.03 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7


C13340

# தனிமையை சவாலாக கொண்டால் ஞானியாகவும் மாறமுடியும்

## அவுஸ்ரேலிய பிரம்மகுமாரிகள் நிறுவனத்தலைவர்

(யாழ்ப்பாணம்)

தனிமையிலும் தனிமை என்பது ஒரு சிறைவாழ்க்கை இது ஒரு மனிதனை பைத்தியக் காரணாக்கும் ஒரு செயலாகும். இந்த வாழ்க்கையை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டால் அவன் ஞானியாக மாறிவிடுவான்.

அவுஸ்ரேலியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பிரம்மகுமாரிகள் நிறுவனத்தைச் சேர்ந்த சார்லஸ் ஹாக் இவ்வாறு தெரிவித்தார்.

பிரம்ம குமாரிகள் நிறுவனத்தின் சர்வதேச ஆன்மீக இணைப்பாளரும் அவுஸ்ரேலியாவில் இயங்கும் பிரம்ம குமாரிகள் நிறுவனத்தின் பொறுப்பாளருமான சார்லஸ் ஹாக் கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள பிரம குமாரிகளின் கிளை அமைப் பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் கூறியதாவது,

தனிமைப்படுத்தல் என்பது மனிதர்களை பைத்தியமாக்கும் முதல் காரணியாக அமைந்து விடுகின்றது. ஆனால் கடந்த 27 வருடங்கள் தன்மையில் சிறையில் அடைக்கப்பட்ட நெல்சன் மண்டேலா பைத்தியம் ஆகாமல் ஒரு ஞானியாக மாறியுள்ளார். இது எமக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது. அது மட்டுமன்றி அவர் சவாலை சவாலாக எடுத்துக் கொண்டமையே இதன் முழு வெற்றி எனவும் தெரிவித்தார்.

மேலும் உளவியல், உடலியல் பொருளாதார காரணங்களால் ஏற்படுகின்ற சவால்களை ஆன்மீக ரீதியில் கையாளும் தன்மையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனையும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

மேலும் இக் கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்த வைத்திய அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கான காரணங்கள் குறித்து கேள்வி எழுப்பியதற்கு பதிலளிக்கும் முகமாகவே அவர் இதனைத் தெரித்தார்.

இவ்வாறானதற்கொலைச் சம்பவங்களுக்கு பிரதான காரணமாக அமைவது மன அழுத்தங்களால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை, சிக்கல்கள் போன்றவையே எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (23)

# திருமறைக் கலாமன்றம் நடாத்தும் நாடகவிழா இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நாடகவிழா இன்றும், நாளையும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இல, 286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இவ்விழா நடைபெறவுள்ளதுடன் இதில் 7 வகையான நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

ஒரு இனத்தினதும், பண்பாட்டினதும் கலை சார் முக்கியத்துவம், சமூக மேம்பாட்டுச் சிந்தனையும் மிக்கதான மேடை நாடகக் கலையானது எமது சமூகத்தில் கடந்த கால யுத்த சூழ்நிலைகளாலும் தற்போதைய நவீன தொடர்பூடாக ஆதிக்கங்களினாலும் நலிவடைந்து வரும் சூழலில் நாடகத்தை நோக்கிய பார்போரின் வருகையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் உதிரிகளாக மேடையேற்றப்பட்ட நாடகங்களை ஒரே களத்தில் ஒன்றிணைக்கும் செயற்பாடாகவும் இந்நாடக விழா இடம் பெறுகின்றது.

இதன்படி இவ்விழாவில் முதல் நாள் நிகழ்வாக இன்று,

('நிற்க கற்க'<br>'எட்டுமுள வேட்டி') நவீன நாடகம்

குவேனி தென்மோடி நாட்டுக்கூத்து.

இரண்டாம் நாள் நிகழ்வாக நாளை,

('மண விலங்குகள் எதற்கும்'<br>'ஒரு காலமுண்டு') நவீன நாடகங்கள்

கடமை வீரன் (சிறுவர் நாடகம்),

சத்திய வேள்வி (இசை நாடகம்).

ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளதுடன் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாடகவிழாவை பார்வையிட ஆர்வலர்கள் அனைவரையும் வருகைதருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்.

## சட்டவிரோத மண் கடத்தல் 2 உழவு இயந்திரங்கள் பறிமுதல்

(சாவகச்சேரி)

சட்டவிரோத மண் கடத்தலில் ஈடுபட்ட இரு உழவு இயந்திரங்கள் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினமிரவு கைப்பற்றப்பட்டன.

இரவு வேளையில் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிவந்த இரு உழவு இயந்திரங்களும் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வைத்து சாவகச்சேரி பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதுடன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்டோர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக நேற்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## சேதமடைந்த பாலம் புனரமைப்பு பணி ஆரம்பம்

சாவகச்சேரி தனங்கிளப்பு பாதையில் உள்ள சேதமடைந்து இருந்த பாலத்தின் மீள் புனரமைப்பு பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாவகச்சேரி நகரில் இருந்து தனங்கிளப்புக்குச் செல்லும் பாதையில் உள்ள பாலம் சேதமடைந்து இருந்தது. இந்தப் பாலத்தினை மன்னார், முழங்காவில், பூநகரி, மல்லாவி, தனங்கிளப்பு போன்ற பகுதிகளுக்குச் செல்வோர் பயன்படுத்தி வந்தனர்.

பாலம் சேதம் அடைந்திருந்ததால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது கடந்த வாரம் மீள் புனரமைப்பு பணிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது. (130)



அழகுற அமைக்கப்பட்டு திறப்பு விழாவுக்கு காத்திருக்கும் சாவகச்சேரி நகரசபை கலாசார மண்டபம். (130)




# புதுசு நீங்கள்... போகப் போகத்தான் விளங்கும்

சும்மா சொல்லப்படாது – சிலருக்கு வேசப் பொருத்தம் அந்தமாதிரி அம்சமாக அமைஞ்சுவிடும்.

அப்படியொரு வேசப்பொருத்தம் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கஜதீபனுக்கும் வலு பொருத்தமாய் அமைஞ்சிருக்கு.

இளம் பெடியன்தானே! அதனால நல்லாய்க் கனைக்கிறார். இருந்தாற்போல அவருக்கு வந்த தமிழ்த்தேசியப் பற்று பக்தியாகி, இப்ப அதுவே அவரைத் தேவாரம் பாடவும் வைச்சிருக்கு.

எங்க போனாலும் பெரிய புரட்சிகர வசனங்களை எல்லாம் பேசிக் கலக்குகிறார் சிங்கன்.

இப்படிக் கஜதீபன் முழங்க, முழங்க அவருடைய விசுவாசிகள் கைகளைத் தட்டிக்கொண்டே இருக்கினம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை எதிர்காலத்தில் வழிநடத்த வாராதது போல வந்த மாமணியே என தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் புளுகிப் பெருமிதமடைகிறார்.

"தம்பியின் இனப்பற்று இந்தத் தலைமுறை அறிய வேண்டிய ஒரு முக்கியமான சங்கதி" என்கிறார் முதலமைச்சரே!

இப்படியெல்லாம் ஆளாளுக்குப் பப்பா மரத்தில் ஏத்தி விட்டால், பிறகு சொல்லவும் வேணுமா,

தம்பிக்குப் பித்தம் தலைக்கேறி கண்மண் தெரியுதில்லை. கால் எது தலை எது என்று தெரியாமல் தடுமாறுகிறார்.

இப்படியே ஆளாளுக்கு கொம்பு சீவினால் சின்னப் பசுவும் சிங்கம் போலக் கர்ச்சிக்குமாம்.

தொண்டர் ஆசிரியராக இருந்தபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு நடையாக நடந்து காற் செருப்பைத் தேய்த்த கஜதீபன், இப்ப தமிழ்த்தேசியம் பேசும் தீவிர தேசியவாதியாகிவிட்டார்.

தேசியவாதி வேடம் போட்டால் சும்மா இருக்க முடியுமா?

வலி.வடக்கில் மீள்குடியேற்றம், தீவகத்தில் அபிவிருத்தி என்று எதையாவது சொல்லித் தொலைக்க வேண்டும் அல்லவா!

அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார் சிங்கன்.

தீவகத்தில் அபிவிருத்தியைப் பற்றிக் கதைப்பதற்கு முன்னர் ஒரு தடவை தீவுப்பகுதிக்குப் போய் அங்கே என்ன நடந்திருக்கு? இனி என்னவெல்லாம் நடக்க இருக்கு? என்ன செய்ய வேணும் என்றெல்லாம் பார்க்கட்டும்.

தீவின் தெருக்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. தேவையான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மின்சாரம் எல்லாக் கிராமங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. குளங்கள் திருத்தப்பட்டுள்ளன.

ஆனால், தீவில்தான் ஆட்களே குறைவாக இருக்கிறார்களே!

இனி ஆட்கள் வந்தால்தானே ஊர்கள் செழிக்கும். வீடுகள் திருத்தப்பட்டு சந்தையும் கடையும் சனப்புழக்கமாக இருக்கும்.

இதைத்தான் கஜதீபன் செய்ய வேண்டும்.

வெள்ளவத்தையிலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழ்த்தேசியவாதிகளையும், ஊர்ப்பற்றாளர்களையும் கஜதீபன் தீவுக்கு அழைக்க வேணும்.

ஆட்கள் இல்லாத ஊர்களில் எவ்வளவு காசைக் கொட்டி எதைச் செய்தாலும் அது கண்ணுக்குத் தெரியாது.

வடக்கு மாகாணசபையில் உறுப்பினராக இருக்கும் கஜதீபன் ஒரு தீர்மானம் கொண்டு வரவேணும்.

மீள்குடியேற்றத்துக்கு வெள்ளவத்தையிலும், வெளிநாடுகளிலும் மறைந்திருக்கிற தேசப்பற்றாளர்கள், ஊர்ப்பற்றாளர்கள், இனப்பற்றாளர்கள், மொழிப்பற்றாளர்கள் எல்லாம் வாருங்கள் என்று.

ஆட்கள் இல்லாத ஊர்களை வைத்துக் கொண்டு தேசம் பற்றியும், தனி நாட்டைப் பற்றியும், சுதேச ஆட்சியைப் பற்றியும் சிந்திக்க முடியாது.

கஜதீபன் பாவம் அரசியலுக்குப் புதுசு நீங்கள். போகப் போகத்தான் விளங்கும் எல்லாம்.

விசிறியை அசைக்காமல் காற்று வராது.
உழைப்பில்லாமல் உயர்வு வராது.
- சீனப் பழமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தீர்வு கிடக்கட்டும், கூத்தைப் பார்!

இப்போது யாரும் தீர்வைப் பற்றிப் பேசுவதைக் காணோம். தலைவர்களும் அதைப் பற்றிப் பேசுவதாயில்லை; மக்களும் கேட்பதாயில்லை. எல்லோருக்கும் ஜெனிவா பிஸி!

அதாகப்பட்டது, ஜெனிவா மகாநாட்டில்தான் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்வதற்கான அலுவல் நடக்கப் போகிறது. மகாநாடு முடியும் வரை வேறு மூச்சுப் பேச்சில்லாமல் அதையே கவனித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது வருடா வருடம் தமிழ் மக்களுக்கு எப்படியோ தெரிந்துபோய்விடுகிறது.

டிசம்பரிலிருந்து ஏப்ரல் வரை தமிழ் மக்கள் ஜெனிவாவைப் பார்த்தபடி காத்திருக்கும் காலம். இந்தக் காலகட்டத்தில் அமெரிக்கா என்ன சொல்கிறது? பிரிட்டன் என்ன சொல்கிறது? இந்தியா என்ன சொல்கிறது? அவுஸ்ரேலியா கனடா என்ன சொல்கின்றன? என்று வெளியிட்டுக் கொண்டிருப்பதுதான் தமிழ் மக்களுக்கான தமிழ் ஊடகங்களின் சேவை.

தமிழ்மக்களின் விடிவுக்கான வெளிச்ச கீற்றுகள் அங்கங்கே தெரிவதைப் பாருங்கள் என்று ஒருபக்கம் ஊடகங்கள் காட்டிக் கொண்டிருக்க, "இலங்கை அரசாங்கம் மூன்றாவது முறையும் தோற்கடிக்கப்படப் போகும் நல்ல செய்தி வரப்போகுது நல்ல செய்தி வரப்போகுது" என்று தலைவர்கள் இன்னொரு பக்கம் குடுகுடுப்பை அடித்தபடி இருப்பார்கள்.

இப்படியே இந்த நாலு மாதமும் ஜெனிவா திருவிழாப் பிராக்கில் மக்களது பொழுது போகும். மார்ச் முடிவில் அங்கே ஏதாவது ஒரு பிரேரணை நிறைவேறும். அதன்படிக்கு ஒழுங்காக இலங்கை அரசாங்கம் நடந்துகொள்ளா விட்டால், அடுத்த ஜெனிவா மாநாட்டில் அது நிச்சயம் தோற்கடிக்கப்படப்போவது உறுதி.

ஆகவே, ஏப்ரலை அடுத்த நாலு மாதங்களும் சர்வதேச நாடுகளின் நகர்வுகளை உன்னிப்பாகக் கவனித்தபடி காத்திருக்கும் காலம். பிறகு டிசம்பர் வந்துவிடும். 2015 மார்ச்சிலும் சுவிட்சர்லாந்து நாட்டின் அழகுநகராம் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளால் தோற்கடிக்கப்படும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதற்காக மக்கள் இதே நிலைமைகளோடு காத்திருப்பர்.

மக்களுக்கு அந்த மகிழ்ச்சியைக் காட்டிவிடுவதற்காக, மக்களின் சேவையை உயிர்மூச்சாகக் கொண்ட தங்கத் தலைவர்கள், மார்ச் மாதத்தை எதிர்பார்த்து, புலம்பெயர் தமிழர்கள் உள்ள வெளிநாடுகளுக்கெல்லாம் ஓடி ஓடி அலுவல் பார்ப்பார்கள். அதை உணர்ச்சி பொங்க மக்கள் பார்த்தபடி இருப்பார்கள்.

தீர்வு – மாகாண சபை – பதின்மூன்று பிளஸ் எல்லாம் யாருக்கு வேண்டும்? இன்னும் ஐந்தோ பத்தோ வருடங்களிலாவது இலங்கை அரசின் மீது போர்க்குற்ற விசாரணை நடந்து, இந்த ஜனாதிபதி சர்வதேசத்தால் தண்டிக்கப்பட்டு விட்டால், அதன்பின் தனிநாடல்லவா நமக்கு வந்துவிடும்... என்ற எதிர்பார்ப்பில்தான் இந்த வேடிக்கைகள் நடக்கிறது போலும்!

சரி, தனிநாடு பெற்றுவிடலாம் என்று நம்புபவர்கள் அல்லது சிங்களவனோடு சேர்ந்து வாழ்வது இனி நடக்காது; பிரிவினை சரிவராவிட்டால் வெளிநாடு போய் செட்டிலாகிவிட வேண்டியதுதான் என்ற முடிவிலிருப்பவர்கள் வேண்டுமானால் இந்த ஜெனிவா கூத்துகளை ஆடுவதும் சிங்கள சமூகத்திற்குச் சவால்களை விடுவதுமாக காலத்தைக் கடத்தலாம்.

ஆனால், இந்தத் தீவில் ஏனைய சமூகங்களோடும் சேர்ந்துதான் நாம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு வாழவேண்டும் என்ற யதார்த்தம் புரிந்தவர்கள் ஏன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு மௌனமாக வாளாவிருக்கிறார்கள்? அல்லது தங்கத் தலைவர்களுக்கு வாக்குப் போடுகிறார்கள்? - ஆசிரியர்.

# முஸ்லிம்களின் ஆதரவை குறைத்து மதிப்பிட முடியாது

## கோத்தாபய தெரிவிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் உட்பட முஸ்லிம் நாடுகளினதும் சீனாவினதும் உதவியும், ஒத்துழைப்பும் கிட்டியதன் காரணமாகவே யுத்தத்தை வெற்றிகொள்ள முடிந்தது, இலங்கை முஸ்லிம்களும் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை குறைத்து மதிப்பிட முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியின் ஏற்பாட்டில் தலைநகரிலுள்ள முஸ்லிம் வர்த்தக சமூகத்தின் குழுவொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வர்த்தக பிரமுகர் ரிபாய் ஹாஜியாரின் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் அமைச்சர் பௌசியுடன் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, சர்வதேச வை.எம்.எம்.ஏ.தலைவர் அஷ்ரப் ஹுசைன், கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே. எம். முஸம்மில், முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம். அமீன் உட்பட வர்த்தகப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுகுழுக்கள் ஆட்டம் போடுகின்றன அதனை நாம் அடக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்க மாட்டோம். எதிர்ப்புச்சக்திகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். முஸ்லிம் சமூகம் அஞ்சத் தேவையில்லை.

முஸ்லிம் சமூகம் ஒருபோதும நாட்டுக்கு துரோகமிழைக்கவில்லை. அவர்கள் அரசுக்கு விசுவாசமாகவே இருக்கின்றனர். இதனை நாம் ஒருபோதும் மறவோம். இறுதிக்கட்ட யுத்தத்தின்போது எமது படைக்கு பாகிஸ்தானும், வேறு சில முஸ்லிம் நாடுகளும் தாராளமாக உதவியுள்ளன. அதேபோன்று சீனாவும் உதவியது.

இறுதி நேரத்தில் உள்ளகப் பிரச்சினை காரணமாக சீனா பின்வாங்கிய நிலையில், பாகிஸ்தானும் முஸ்லிம் நாடுகளும் இறுதிவரை உதவியளித்தன. அந்த உதவி கிட்டாதிருந்தால் இறுதி யுத்த வெற்றி கிட்டி இருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமானதாகும். இந்த நன்றியை அரசு ஒருபோதும் மறவாது. முஸ்லிம்களை அரசு ஒருபோதும் கைவிடப்போவதில்லை. முஸ்லிம் சமூகத்திற்கு நாம் அநீதி இழைக்கப் போவதில்லை. உங்கள் உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படும் என்றார்.

# அரசியல் ஒழுக்கத்தை சீரழிக்கவே விருப்புவாக்கு

தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்ட விருப்பு வாக்கு முறையானது அரசியல் கலாசாரத்தையும் ஒழுக்கத்தையும் அழித்தது என அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசியல் கலாசாரத்தை அழித்தது மாத்திரமல்லாமல் விருப்பு வாக்கு முறைமை நாட்டுக்கு சேவையாற்றக் கூடிய அரசியல்வாதிகள் உருவாகுவதையும் குறைத்தது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விருப்பு வாக்கு தேர்தல் முறை ஆரம்பமாகிய பின்னர் எமது சமூகத்தில் இருந்து கௌரவமான அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து விலகுவது ஆரம்பமானது என்றார்.

# சிவராத்திரி உற்சவம்

நெடுங்கேணி கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தின் சிவராத்திரி உற்சவம் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

பிரதமகுருக்களினால் 4 சாம பூசைகளும் வசந்த மண்டபத்தில் இடம்பெற்றதுடன், கலைநிகழ்வுகளாக சிறுவர்களின் நடன, இசைக்கச்சேரி என்பன இடம்பெற்றது. இதில் பெருந்திரளான மக்கள் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்து கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# தானியங்கி விரல் அடையாளமுறை தேசத்திற்கு மகுடத்தில் அறிமுகம்

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் கலந்து கொண்டு, தானியங்கி விரல் அடையாள முறைமையை ஆரம்பித்து வைத்தார்.

குற்றவாளிகளை இலகுவாகக் கண்டுபிடிக்கும் வகையில் இது உள்ளூரில் வடிவமைக்கப்பட்டு இலங்கை தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்களினால் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜகத் ஜயசூரிய முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள், தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவின் தலைவருமான ரஞ்சித் சியம்பலபிட்டிய ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நீர்த்தேக்கங்களை நம்பி சிறுபோகத்தில் ஈடுபட வேண்டாம்

## நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுரை

(கொழும்பு)

சிறுபோகம் ஆரம்பமாகுவதற்கு முன்னர் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்த அளவிலேயே இருப்பதாக நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நீர்த்தேக்கங்களின் மீது நம்பிக்கை வைத்து சிறுபோக நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டாம் என்று விவசாயிகளிடம் திணைக்களம் கோரியுள்ளது.

போதுமான அளவு மழை வீழ்ச்சி கிடைக்காத காரணத்தினால் மின்னுற்பத்தி நிலையங்களை அண்டிய நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டங்கள் குறைவடைந்துள்ளன. இதன்காரணமாக, மின்சார உற்பத்தி 18 சதவீதம் குறைவடைந்துள்ளதாக மின்சார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் மொத்த மின்சார உற்பத்தி 2 ஆயிரத்து 200 மெகாவோட் ஆகவுள்ளது. அவற்றில் ஆயிரத்து 300 மெகாவோட மின்சாரம் நீர்மின்னுற்பத்தி மூலம பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் முறைப்பாடுகள் 408

(கொழும்பு)

தேர்தல் சட்ட மீறல் மற்றும் தேர்தல் வன்முறைகள் குறித்து இதுவரை 408 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக கபே இயக்கம் தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்ட விதிகள் மீறப்பட்டமை குறித்து 392 முறைப்பாடுகளும் தேர்தல் வன்முறைகள் குறித்து 96 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதென கபே இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் 240 முறைப்பாடுகளும் தென் மாகாணத்தில் 156 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதென கபே குறிப்பிட்டுள்ளது.



**கடற்புலிகளின் விசேட தளபதி சூசை சில கட்டங்களில் கடுமையான கொதி பிடித்தவராக காணப்படுவார். சில வேளைகளில் நட்புறவுடன் சிநேக பூர்வமாக பழகக் கூடியவர். இவரின் ஒட்டு மொத்தக் குணங்களையும் பிரபாகரன் நன்றாக அறிந்திருந்தார். பிரபாகரனுடன் நீண்ட காலம் சூசை ஒன்றாக இருந்ததுடன் ஒரு வழியில் பிரபாகரனின் உறவினராகவும் இருந்தார். அத்துடன் பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய ஒருவராகவும் சூசை திகழ்ந்து வந்தார்.**

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

**66**

வே. அர்ச்சுணன்

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் பல திருப்பு முனைகளை ஏற்படுத்துவதில் கடற்புலிகள் பிரதான பங்காற்றி இருந்தனர். குறிப்பாக புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து பல்வேறு கட்டமைப்புக்களையும் நிறுவி போராட்டத்தை நடத்திய போதும் உலக அரங்கில் வெளிப்படையான அங்கீகாரம் என்பது புலிகள் முள்ளிவாய்க்கால் முடிவு-களை சந்திக்கும் வரை கிடைக்கவேயில்லை.

ஆனால் மறைமுகமான அங்கீகாரத்தை சில நாடுகள் வழங்கிக்கொண்டே இருந்தன. இதைவிட புலிகள் பேச்சு வார்த்தை மேசைக்கு திரும்பிய காலத்தில் கடற்புலிகள் அணியை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கரிசனை யப்பானிடமும், ஒருவர் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரேயே வழங்கியிருந்தார். புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் ரகசியமாகச் சந்தித்த போது வங்கிக் கட்டமைப்பின் தேவை பற்றி வலியுறுத்தியதை அடுத்தே புலிகள் தமிழீழ வைப்பகம் என்ற முக்கிய கட்டமைப்பை ஆரம்பத்தில் நிறுவி இருந்தனர். இது பேச்சு வார்த்தைகள் இடம் பெறுவதற்கு பல வருடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வாகும்.

இந்த நிலையில் புலிகளின் பிர-தான கட்டமைப்பான கடற்புலிகள் அணியை கலைக்க வேண்டும் என்ற அகாசியின் யோசனை விடுதலைப் புலிகள் மட்டத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி இருந்தது. இந்த விடயம் தொடர்பில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை மிகவும் கடுப்படைந்ததுடன் யப்பானிய சமாதான தூதுவர் யசூசி அகாசியிடம் சொல்லுங்கள்,

**புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பிய காலத்தில் கடற்புலிகள் அணியை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கரிசனை யப்பானிடமும், அமெரிக்காவிடமும் இருந்த போதிலும் நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத்திற்கான விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் புலிகள் அனைத்து கட்டமைப்புக்களையும் கொண்டிருந்தால் மட்டுமே சர்வதேச அங்கீகாரத்தை பெறமுடியும் என்ற கருத்தை விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தி இருந்தார்.**

அமெரிக்காவிடமும் இருந்த போதிலும் நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத்திற்கான விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் புலிகள் அனைத்து கட்டமைப்புக்களையும் கொண்டிருந்தால் மட்டுமே சர்வதேச அங்கீகாரத்தை பெறமுடியும் என்ற கருத்தை விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தி இருந்தார்.

இதேவேளை விடுதலைப் புலி களின் கட்டமைப்புக்களில் வங்கிக் கட்டமைப்பு தொடர் பிலான ஆலோசனையை சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணை வழங்கிய நாட்டின் பிரதான பிரமுகர் கடற்புலிகளின் கட்டமைப்பு என்பது புலிகளின் படைவலுச் சமநிலையை வைத்திருப்பதன் ஒரு அலகு. எனவே இந்தக் கட்டமைப்பு ஒரு கட்டத்திலும் கலைக்கப்பட மாட்டாது என்பதை உறுதியுடன் தெரியப்படுத்துங்கள் என்று கூறி விட்டு தமிழ்ச் செல்வனின் பதிலுக்கோ அல்லது, பிரபாகரனின் பதிலுக்கோ காத்திருக்காமல் அவசரமாக ஒரு பணி இருப்பதால் நான் செல்ல வேண்டும் என்று இறுகிய முகத்துடன் சூசை அந்த சந்திப்பிலிருந்து வெளியேறிச் சென்றார்.

கடற்புலிகளின் விசேட தளபதி சூசை சில கட்டங்களில் கடுமையான கொதி பிடித்தவராக காணப்படுவார். சில வேளைகளில் நட்புறவுடன் சிநேக பூர்வமாக பழகக் கூடியவர். இவரின் ஒட்டு மொத்தக் குணங்களையும் பிரபாகரன் நன்றாக அறிந்திருந்தார். பிரபாகரனுடன் நீண்ட காலம் சூசை ஒன்றாக இருந்ததுடன் ஒரு வழி யில் பிரபாகரனின் உறவினராகவும் இருந்தார். அத்துடன் பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய ஒருவராகவும் சூசை திகழ்ந்து வந்தார்.

புலிகளின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அச்சாணியாகச் சுழன்ற கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை, யாழ். மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் பொலிகண்டியில் திரு. திருமதி தில்லையம்பலம் தம்பதியினருக்கு 1963ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிறந்தவர். குடும்பத்தில் இரண்டாவது மகனாகப் பிறந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சிவநேசன். ஆனால் காந்தி என்றுதான் இவர் அழைக்கப்பட்டார்.

1982ஆம் ஆண்டு காலப்பகுதி. சிங்கள பேரினவாத அடக்கு முறைகளுக்கு எதிராக போராட்டம் முளைவிடத் தொடங்கிய காலம். அந்தக் காலப்பகுதியில் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளான கப்டன் பண்டிதர், கப்டன் றஞ்சன்லாலா, கேணல் கிட்டு ஆகியோரின் அறிமுகத்தைத் தொடர்ந்து 1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் காந்தி தன்னையும் ஒரு முழுநேர விடுதலைப் போரா-ளியாக இணைத்துக்கொண்டார்.

இயக்கப் பாசறையில்தான் இயக்கப் பெயராக சூசை என்ற பெயரைப் பெற்றார். தொடக்க நாட்களில் கிட்டுவின் வழிகாட்டலில் செயற்பட்டிருந்தார். இதன் பின்னர் 1983ஆம் ஆண்டு பிற்பகுதியில் லெப். கேணல் பொன்னம்மான் தலைமை யில் 200 பேரைக் கொண்ட புலி களின் முதலாவது அணியினருடன் இணைந்து பயிற்சிக்காக இந்தியா சென்றார். 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பயிற்சி முடித்து தாயகம் வந்த சூசை வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளராக தலைவர் பிரபா கரனால் நியமிக்கப்பட்டார்.

இவரது நியமனத்தைத் தொடர்ந்து வடமராட்சி மற்றும், வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் முனைப்புப் பெற்றன. இயக்கத்தை வளர்க்க பெருமளவு இளைஞர்களை பயிற்சிகள் பெறுவதற்காக கடல்வழியாக தமிழ் நாட்டிற்கு அனுப்பி வைத்தார் சூசை. அத்துடன் வடமராட்சி கிழக்கு மாவிலங்கை காட்டுப் பகுதியிலும் பயிற்சி முகாம் அமைத்து அங்கும் புதிய போராளிகளுக்கான பயிற்சிகளை வழங்கினார்.

கிராமங்கள் தோறும் மக்கள் கடை என்ற பேரில் வணிக நிலையங்களை நிறுவியது, சில படித்த இளைஞர் யுவதிகளை ஒன்று சேர்த்து முதலுத விப் பயிற்சிகளை வழங்கி முதலுதவி நிலையங்களை நிறுவியது, மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க இணக்க மன்றங்களை நிறுவியது எல்லாம் சூசையின் அந்நேரப் பணிகளாக இருந்தன.

சமூக ரீதியிலான இத்தகைய பணி கள் ஒருபுறம் இருக்க வடமராட்சியில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதல்கள் அனைத்திலும் நேரடியாகப் பங் கெடுத்துமுள்ளார். 1987ஆம் ஆண்டு யூலைமாதம் 5ஆம் திகதி முதல் முதலாக கரும்புலிகள் தாக்குதல் மேற்கொண்டு இராணுவத்தினரின் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயப் படைமுகாமை தகர்த்தனர். இந்தத் தாக்குதலில் கரும்புலி கப்டன் மில்லர் வெடிமருந்து நிரப்பிய வாகனத்தை முகாமுக்குள்ளே கொண்டு செல்வதற்கான பாதையை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு சூசை தலைமையிலான அணியினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்தியப் படையினருக்கு எதிரான கெரில்லா தாக்குதல்களிலும் சூசை பங்கெடுத்திருந்தார். தமிழ் நாட்டிலிருந்து கடல் வழியாக படகுகளில் கொண்டு வரப்படுகின்ற படைக் கலங்களையும் ஏனைய பொருட்களையும், பாதுகாப்பாகப் பத்திரப்படுத்தி வைத்து அவற்றை மணலாற்றுக் காட்டுக்கு அனுப்பி வைப்பது இவரது பொறுப்பிலிருந்தது. மண்டை தீவு தாக்குதல், யாழ் கோட்டை முகாம் மீதான தாக்குதல், 1991ஆம் ஆண்டு ஆனையிறவு படைத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட ஆகாயக் கடல் வெளிச்சமர் உட்பட அனைத்து தாக்குதல்களிலும் சூசை தலைமையிலான தாக்குதல் அணி பங்கெடுத்திருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயற்பட்டுக்கொண்டிருந்த கடற்புறா அணி 1991ஆம் செப்ரெம்பர் மாதம் 19ஆம் நாளன்று கடற்புலிகள் என்ற கட்டமைப்பாக பரிணமித்த போது அதன் சிறப்புத் தளபதியாக சூசை நியமிக்கப்பட்டார்.

(தொடரும்)

# இலங்கைக்கு வருகின்றது சீனாவின் பாரிய வர்த்தகக் குழு

(கொழும்பு)

25 பேர் கொண்ட மற்றுமொரு பாரிய சீன வர்த்தக பிரதிநிதிகள் குழு அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளது.

இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான வர்த்தக தொடர்பை விரிவுப்படுத்தும் நோக்கில் இந்தக் குழு இலங்கைக்கு வருவதாக, சீன அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நான்காம் திகதி இலங்கைக்கு வரும் அந்தக் குழு, இலங்கையின் மின்சாரத்துறை, கட்டுமானப் பணிகள் மற்றும் உணவு உற்பத்தி போன்ற துறைகளை ஆய்வு செய்யவுள்ளது.அத்துடன் இலங்கையின் முதலீட்டு சபையின் உறுப்பினர்களையும் சந்தித்து, முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளது.

# காணாமற்போனவர்களின் குடும்பங்களின் தேவைகளை ஆராய்கிறது ஐ.சி.ஆர்.சி.

இலங்கையில் காணாமற் போனவர்களின் குடும்பங்களின் தேவைகள் குறித்த மதிப்பீடு ஒன்றை தாம் ஆரம்பித்துள்ள தாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடனேயே இதை தாம் செய்வதாகவும் அது குறிப்பிட் டுள்ளது.

இந்த மதிப்பீடானது காணா மற் போனவர்கள் குறித்த முடிவு தெரியாமல் இன்னமும் தொடரும் சம்பவங்கள் குறித்து மறு ஆய்வு செய்து, உறுதி செய்யவும், அதேபோன்று இந்த விவகாரம் குறித்து தீர்வு காணப்பட்ட விடயங்களை முடி வுக்கு கொண்டுவரவும் உதவும்.

16,000 இற்கும் அதிகமான காணாமற் போன சம்பவங்கள் குறித்த பதிவுகள் தற்போது இருக கின்றன எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கையில் 2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், காணா மற் போனவர்கள் குறித்து ஒரு சர்வதேச அமைப்பு மேற்கொள் ளும் முதலாவது கணிப்பீடு இதுவாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

# ஜனாதிபதி தேர்தலை வலியுறுத்தி சித்திரையின் பின் போராட்டங்கள்

## ரணில் அறிவிப்பு



(கொழும்பு)

இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துமாறு கோரப் படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வனாத்தமுல்ல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

தற்போதைய ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக் கில் இந்தக் கோரிக்கை விடுக் கப்படவுள்ளது.

எதிர்வரும் சித்திரைப் புத் தாண்டைத் தொடர்ந்து ஜனா திபதித் தேர்தலை நடாத்துமாறு கோரிப் போராட்டங்கள் நடத்தப் படவுள்ளன.

ஜனாதிபதி தேர்தலை வலி யுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தவுள்ளது.

எதிர்க்கட்சிகள் இணைந்து இந்த அரசாங்கத்தை கவிழ்த்து, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் என ரணில் விக்ர மசிங்க தெரிவித்துள்ளார்.

# கட்டுப்பாட்டு விலையை மிஞ்சுகின்றது "அரிசி"

அரசாங்கம் நிர்ணயித்துள்ள கட்டுப்பாட்டு விலையை மீறி தற்போது அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மதிப்பீடுகளின் பிரகாரம், 70 ரூபாவிற்கு விற்பனை செய்ய வேண்டிய ஒரு கிலோ சம்பா அரிசி தற்போது 78 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2013, 9 ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைவாக கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி அதி விஷேட அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அரசாங்கம் ஒரு கிலோ கிராம் அரிசிக்கான விலை நிர்ண யத்தை வெளியிட்டது.

இதன் பிரகாரம், கீரி மற்றும் சூதுரு ஆகிய இரண்டு சம்பா அரிசி வகைகளை தவிர கல் அகற்றப்பட்ட ஏனைய சம்பா அரிசி ஒரு கிலோ கிராம் விற்கப்பட வேண்டிய சில்லறை விலை 70 ரூபாவாகும். சிவப்பரிசி மற்றும் நாட்டரிசி ஒரு கிலோ கிராமின் விற்பணை விலை 60 ரூபாவாகும்.

ஆனால், புள்ளிவிபரவியல் மற்றும் மதிப்பீட்டு திணைக்களத் தின் தரவுகளின் பிரகாரம், தற்போது சந்தையில் சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 78 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, ஒரு கிலோகிராம் நாட்டரிசியின் விலை 67ரூபா வாகவும், சிவப்பரிசி ஒரு கிலோகிராமின் விலை 66ரூபா தொடக்கம் 68ரூபாவாகவும் அதிகரித்துக் காணப்படுவதாக அந்தத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

# மாத்திரைகளை அதிகம் உட்கொண்டதால் பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர் மரணம்



உயரழுத்த நோய்க்குரிய மாத் திரைகளை அதிகளவில் உட் கொண்டு ஆபத்தான நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட ஆண்டிகம, நாகவில புத்திபெதும்கம பிரதேசத்தைச் சேர்ந்த இணைப்புச் செயலாளர் எஸ்.எம்.ரணசிங்க காமினி (வயது 52) சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் அதிகாலை உயிரிழந்ததாக சிலாபம் பொலிஸார் தெரி வித்தனர்.

புத்தளம் மாவட்டத்தின் தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட பிரதியமைச்சர் விக்டர் அன்ரனி பெரேராவின் இணைப் புச் செயலாளராக இவர் பணியாற்றி வந்துள்ளார்.

குளியாப்பிட்டியில் "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியை தனது பிள்ளைகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட இவர், பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஆராச்சிக்கட்டு பிரதே சத்திலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், இவர் உயரழுத்த நோய்க்குரிய மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனை அறிந்து சிலாபம் வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தபோது தனது கணவர் உயிரிழந்திருந்ததாக இவரின் மனைவி கங்கா சுவர்ணலதா (வயது 45) வாக்குமூலத்தில் கூறிய தாகவும் பொலிஸார் கூறினர்.

தனது கணவர் உயரழுத்த நோய்க்கான மாத்திரைகளை உட் கொள்பவரெனவும் மனைவி கூறினார். இவர் 03 பிள்ளைகளின் தந்தை ஆவார்.இது தொடர்பான விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ஓய்வுபெறும் தளபதிக்கு நினைவுச்சின்னம் வழங்கல்



இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மாசல் ஹரஷ அபேவிக்ரம இன்று முதல் சேவை யிலிருந்து ஓய்வு பெறுகிறார். இதனை முன்னிட்டு ஏயார் மார்ஷல் ஹர்ஷ துமிந்த அபேவிக ரமவும். பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செய லாளர் கோத்தாபய ராஜபக்ஷ வும் நினைவுச்சின்னங்களை பரி மாறிக் கொண்டனர்.


ஏயார் மார்ஷல் ஹர்ஷ துமிந்த அபேவிக்ரம 1980 இல் இலங்கை விமானப்படையில் சேர்ந்து 1982 மோதல் உச்சக் கட்டத்தில் அவர் போர் விமானங்களை பயிற்சி எடுத்து முதல் விமா னியாக தேர்வு செய்யப்பட்டார்.

அவர் இலங்கை விமானப்படை யின் முதல் ஜெட் படை நிறு வுவதில் பொறுப்பு வழங்கப்பட் டது. பின்னர் அவர் 5 ஜெட் படை முதல் கட்டளை அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர் சூப்பர் சோனிக் பறக்க முதல் இலங்கை பைலட் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

அவர் 2006 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் இயக் குனர் வான் செயல் இயக்குனர் நடவடிக்கைகளுக்கு மேலாண்மை விமானப்படை வாரியம் நிய மிக்கப்பட்டார். . பின்னர் அவர் 2008 இல் இயக்குனர் வான் செயல் என தொடர்ந்து அதே பணியாளர்களின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

# ஐ.நா.தீர்மானங்களுக்கு அஞ்சப்போவதில்லை

## ஜனாதிபதி உறுதி



ஐக்கிய நாடுகள் அமைப்பின் தீர்மானங்களைக் கண்டு அஞ்சப் போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள். ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக் கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட வுள்ள தீர்மானத்தை நிராகரிப்ப தாகத் தெரிவித்துள்ளார்.

மொரட்டுவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.கியூபா போன்ற நாடுகள் இவ்வாறான பல தீர்மானங்களை எதிர்நோக் கியுள்ளன.

இலங்கைக்கு எதிராக இரண்டு தீர்மானங்களே இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜெனிவா பிரச்சினை தொடர்ந தும் ஓர் தலைவலியாக அமைந் துள்ளது அதைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.கியூ பாவிற்கு எதிராக இவ்வாறான அறுபது தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டள்ளன.

கியூபாவிற்கு விஜயம் செய் திருந்த போது இவ்வாறான தீர் மானங்களை பெரிதுபடுத்த வேண்டாம் என கியூப ஜனாதி பதி ராவல் கஸட்ரோ ஆலோ சனை வழங்கினார். நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் சில நாடு கள் இலங்கைக்கு எதிராக தீர் மானம் நிறைவேற்ற முயற்சித்து வருகின்றன. 30 ஆண்டுகளாக போரை எதிர்கொண்ட இலங் கைக்கு இவ்வாறான அழுத்தங் களை வெற்றிகொள்வது சவா லாக அமையாது என்றார்.

# சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 250பேர் மீது ஒழுக்காற்று

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் கடமையாற்றி வரும் 250 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த உத்தியோகத்தர்கள் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்ட தாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்குள் செல்லிடப் பேசி, போதைப் பொருள் போன்றவற்றை சட்டவிரோதமான முறையில் எடுத்துச் சென்றுள்ள தாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளின் பொறுப்பாளர் களுக்கு எதிராக அதிகளவு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# நட்டாங்கண்டல் அபிவிருத்திக்கு கனரக வாகனம் அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நட்டாங் கண்டல் கிராம அபிவிருத்திக்கு 25 மில்லியன் ரூபா பெருமதியான கனரக வாகனம் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திர்குட்பட்ட நட்டாங் கண்டல் கிராமத்தில் பொதுச் சந்தைக் கட்டடம் திறப்பும் அந்த பிரதேச சபைக்கான பாதைகளை துப்பரவு செய்வதற்கான கனரக வாகனங்களும் கையளிக்கும் நிகழ்வும் கடந்த புதன் கிழமை இடம் பெற்றது.

இதில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அப்பிரதேசத்திற்கான அபிவிருத்திக் குழுத் தலைவருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக், வட மாகாண சபை உருப்பினர்கள், பிரதேச சபை உருப்பினர்கள், பிரதேச செயலாளர், ஊர்த்தலைவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், இக்கட்டடத் தொகுதிக்கு பொருளாதார அமைச்சின் ஊடாக புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் 97 இலட்சம் ரூபா செலவழிக்கப் பட்டதாகவும் மேலும் இப்பிர தேசத்தில் பாதைகள், காடுகள் துப்பரவு செய்ய வேண்டிய தேவை இருப்பதால் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சுமார் 25 மில்லியன் ரூபா பெருமதியான வாகனங்களை பிரதேச சபைக்கு கையளிக்கின்றோம் என்றார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் நல்லிணக்கம் என்பது இன பேதங்கள், கட்சி பேதங்களுக்கு அப்பால் மக்களின் தேவை பிரதேசத்தின் அபிவிருத்தி என்பவற்றை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். ஆனால் வடக்கில் உள்ள தமிழ் கூட்டமைபின் அரசியல் வாதிகள் பலர் இதற்கு மாற்றமாக தமது அரசியல் இருக்கைகளை தக்கவைத்துக் கொள்வதற்காக இன வாதம், மத வாதம் பேசி மக்களை ஒருமாயைக் குள் வைக்க முனைகின்றனர்.

வடபுலத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும், வடபுலத்தில் வசந்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதல் பிரதேச சபை உறுப்பினர்கள் வரை உணர்ந்து செயற்படும் போதுதான் இலங்கையின் ஏனைய மாவட்டங்களைப் போல வடபகுதியையும் அபிவிருத்தியடையச் செய்யலாம் என்றும் குறிப்பிட்டார்.

# வீதி விதியை மீறியோருக்கு ரூபா 1500 தண்டம் அறவீடு

வீதி ஒழுங்கு விதிகளை மீறி பயணித்த இருவருக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் 1500 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி டிப்போ வீதியில் கவனயீனமான முறையிலே முச்சக்கரவண்டி செலுத்திய ஒருவருக்கெதிராகவும் மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவருக்கெதிராகவும் வழக்குப் பதிவு செய்த கிளிநொச்சி பொலிசார் குறித்த இருவரையும் கடந்த 19 ஆம் திகதி நீதிமன்றில ஆயர்படுத்தியிருந்தனர். இதன் போது கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் தலா 1500 ரூபாய் தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளார். (கே)

# வலிந்துதவு அமைப்பாக பதிவு

(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த மீள் எழுச்சித்திட்டத்தில் இணைந்துள்ள சமூக அபிவிருத்தி குழுக்கள் சமூக சேவைகள் அமைச்சின் வலிந்துதவு சமூக சேவைகள் அமைப்பாக பதிவு செய்யப் பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் செயற்படும் 18 கிராம அபிவிருத்தி அமைப்புக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் இச் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இவை முழுமையான சுதந்திரம் உடைய கிராம மட்ட அமைப்புக்களாக இயங்கி வர உள்ளன. (90)

# வீதி புனரமைப்பு பணியால் நெருக்கடிக்கு உள்ளாகும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை - ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தீவுப்பகுதிக்கு பயணிக்கும் வாகனங்களினால் அந்தவீதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பண்ணைக்கும் அல்லைப்பிட்டிச் சந்திக்கும் இடையில் யுத்த காலத்தில் சேதங்களுக்குள்ளகியிருக்கும் பாலங்கள் மதகுகள் புனரமைக்கும் பணிகளுக்கு கனரக இயந்திரங்கள் கொண்டு ஆழமாக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இதனால் குறுகிய வீதியினூடாகவே வாகனங்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

இதற்கான குறியீடுகள் அறிவிப்பு பலகைகள் போடப்பட்டு வாகனங்கள் அனுமதிக்கப்படுகின்றது. எனினும் இதனூடாக பயணிக்கும் பயணிகள் அவதானமாக தமது பயணங்களை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# துன்னாலை இலவச அறநெறி பாடசாலையின் ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


திசைகாட்டி வீசா ஆலோகனை நிலையத்தினால் நடத்தப்படவுள்ள துன்னாலை பிரதேச இலவச அறநெறி பாடசாலையின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

எஸ்.சிவகணேசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். விரிவுரையாளர் ரி.கலாமணி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். நல்லை ஆதின சோமசுந்தர பிரமச்சாரிய சுவாமிகள் ஆசிரியுரைகளை வழங்கவுள்ளார்.

இவ் அறநெறி பாடசாலையில் நவீன பல் ஊடக தெறி கருவி ஊடாக சமய கல்வி இலவசமாக வழங்கப்படுவதுடன் மாணவர்களுக்கு போட்டிகள் நடாத்தப்பட்டு முதல் பரிசாக ரூபா ஐம்பதாயிரம் வழங்கப்படவுள்ளது. கற்கும் மாணவர்களுக்கு இலசவமாக பால் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (54)

# ஆன்மீகமா? கேளிக்கையா? சிவராத்திரி விழாவில் விவாதம்

பன்னாலை சாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் ஆலயத்தின் மகாசிவராத்திரி தினத்தில் அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டத்தின் சிறப்புப்பட்டி மன்ற நிகழ்வு இடம்பெற்றது. இன்றைய சமய விழாக்களில் அதிகம் விஞ்சி நிற்பது ஆன்மீகமா? அல்லது கேளிக்கையா என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றது. நடுவராக சண்டிலிப்பாய் பிரதேசசெயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராசா கடமையாற்றினார்.



அதிகம் விஞ்சி நிற்பது ஆன்மீகமே என்ற அணியின் தலைமைப்பேச்சாளராக யாழ்ப்பாண மத்தியகல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் எஸ்.ரி.குமரன், இணைப் பேச்சாளர்களாக பல்கலைக் கழக மாணவன் ஸ்ரீஸ்கந்தராசா ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தியோகத்தர் அருன்மொழிச் செல்வன் ஆகியோரும் அதிகம் விஞ்சி நிற்பது கேளிக்கையே என்ற அணியின் தலைமைப் பேச்சாளராக சங்கானை பிரதேசசெயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நிகேஷ் இணைப் பேச்சாளர்களாக மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் பல்கலைக்கழக மாணவன் சஞ்சீவன் ஆகியோரும் வாதிட்டமை குறிப்பிடத்தக்கது. (63)

# முரசின் இன்றைய பலன்



(01.03.2014 சனிக்கிழமை)

விஜய வருஷம் மாசி மாதம் 17 ஆம் திகதி.
அமிர்தம் / அமாவாசை / கரிநாள்.
சதய நட்சத்திரம் மு.இ. 8.25 வரை. பின் பூரட்டாதி.
இராகு காலம் 09.28 - 10.58 வரை. சுபநேரம் 03.28 - 04.38 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | [illegible] பொருட்களால் சர்ச்சை ஏற்படும், கொடுத்த கடன் பெறுவதில் சிரமம். |
| ரிஷபம் | காரிய வெற்றி கிட்டும், கடன் அதிகரிக்கும். |
| மிதுனம் | சந்தேகத்தால் குடும்பத்தில் சர்ச்சை, கல்விக்காக வெளியூர் செல்லல். |
| கடகம் | பொறுமை, சகிப்புத்தன்மை அவசியம், முரண்பாடு விலகுதல், வேலைகளில் அலைச்சல். |
| சிம்மம் | வெளிப்படையாக பேசுதல், உடல் நலம் கிட்டும், இடை நிறுத்திய பணியை தொடருதல். |
| கன்னி | கடன்சுமை அதிகரிக்கும், சொத்துக்கள் இழக்கலாம், எடுத்த காரியம் கைகூடும். |
| துலாம் | புதிய முயற்சிகள் தடை தாமதம் ஏற்படும், பழைய நண்பரைச் சந்திக்க வாய்ப்பு கிட்டும் துயர் விட்டுப்போதல். |
| விருச்சிகம் | சிக்கல்கள் அதிகரிக்கும், மனநிலை சோர்வடைதல், எதிரியிடம் இருந்து தப்பித்தல். |
| தனுசு | பிரச்சினை நீங்குதல், நீண்டநாளாக இழுபட்ட காரியம் நிறைவேறும், தவறிய ஆவணம் கிடைத்தல். |
| மகரம் | உடலில் காயங்கள் ஏற்படும், பதகளிப்பு நீங்குதல், பிரச்சினைகள் பின்தள்ளிப் போகும். |
| கும்பம் | புதிய முயற்சிகளை மேற்கொள்ளல், வீட்டாருடன் மனத்தாங்கல் ஏற்படுதல். |
| மீனம் | உடல் நலம் பாதிப்படைதல், திருமணப் பேச்சு தடைப்படும், பெற்றோரின் மனக்குறை அதிகரிக்கும். |



## குழப்பத்தால் கைவிடப்பட்ட இறுதிப்போட்டி

(அளவெட்டி)

அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வந்த தாச்சி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில், அணிகள் மாற்றப்பட்டமையினால் ஏற்பட்ட குழப்பநிலையினால் கைவிடப்பட்டது.

மேற்படி சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு பண்டத்தரிப்பு அறிவொளி அணியும் பண்டத்தரிப்பு சாந்தை அணியும் தகுதி பெற்றிருந்தன.

இருந்தும், பண்டத்தரிப்பு அறிவொளி அணி வீரர் ஒருவர் இச்சுற்றுப்போட்டியில் இரண்டு அணிகளுக்கு விளையாடியிருந்தமை போட்டி ஏற்பாட்டாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டு, அவ்வணி இறுதிப்போட்டியில் விளையாடுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இதனால் பண்டத்தரிப்பு அறிவொளி அணியினை இறுதிப்போட்டியில் விளையாட விடாமல் தவிர்த்து, அதற்குப் பதிலாக அரையிறுதி போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியுடன் தோல்வியடைந்த உடுவில் ஆலடி சிந்து அணி இறுதிப்போட்டிக்கு அழைக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை இறுதிப்போட்டி இடம்பெறுவதாக இருந்த நிலையில் பண்டத்தரிப்பு சாந்தை அணி தாங்கள் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியுடன் தான் விளையாடுவோம் என்று கூறியமையினால் போட்டி குழப்பமடைந்தது.

இந்தக் குழப்பத்திற்கு யாழ். மாவட்டத் தாச்சி சங்க உறுப்பினர்கள் தீர்வு காண முற்பட்ட போதும், அது கைகூடாத நிலையில் இறுதிப்போட்டி கைவிடப்பட்டது.

# பருத்தித்துறை பிரதேச மட்ட கரப்பந்து
# வல்லை, பருத்தித்துறை ஐக்கியம் சம்பியன்





(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் வல்வை, பருத்தித்துறை ஐக்கிய அணிகள் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் வல்வை அணியும், விவேகானந்தா அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வல்வை அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் வல்வை அணியும், பருத்தித்துறை ஐக்கிய அணியும் மோதின. இதில் பருத்தித்துறை ஐக்கிய அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (116)

# வெளியானது
# ஒப்பந்தப் பட்டியல்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான புதிய ஒப்பந்தத்தை நேற்று வெளியிட்டுள்ளது. 2014 - 2015ஆம் ஆண்டுக்கான ஒப்பந்தமே இது. கடந்த 26ஆம் திகதி தெரிவுக் குழுவினரின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுகப்பட்டதுடன் சில புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டும் உள்ளன.

இதில் ஒப்பந்த உயர்வு வழங்கப்பட்ட் நான்கு பேர். தினேஷ் சண்டிமால் தரம் 2 இல் இருந்து தரம் ஒன்றிற்கும், திரிமான்ன தரம் 3 இல் இருந்து தரம் 2 இற்கும், குஷால் ஜனித் பெரேரா தரம் 4 இல் இருந்து தரம் 3 இற்கும், கௌஷால் சில்வா மாகாண தரம் ஒன்றில் இருந்து தேசிய தரம் 4 இற்கும் உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் 17 வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் கீழ் வருமாறு அமைந்துள்ளன.

தரம் 01 : குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, குலசேகர, அஞ்சலோ மத்தியூஸ், ரங்கன ஹேரத், தினேஷ் சண்டிமால்

தரம் 02: திரிமான்ன, அஜந்த மெண்டிஸ்


தரம் 03 : குஷால் ஜனித் பெரேரா, திசர பெரேரா

தரம் 04 : சமின்ட எரங்க, சசித்திர சேனாநாயக்க, கௌஷால் சில்வா, சுரங்க லக்மல்

விசேட ஒப்பந்தம் : பிரசன்ன ஜெயவர்த்தன, டில்சான், லசித் மலிங்க

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தரப்படுத்தல்களின் அடிப்படையில் வீரர்களுக்கு இம்முறை ஊதிய உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. ஒருநாள் சர்வதேச தரப்படுத்தலில் 5ஆம் இடத்தில் இருப்பதற்காக 2% உம், ருவென்ரி-20 தரப்படுத்தலில் முதலாமிடத்தில் இருக்கின்றமைக்கு 5% உம் ஆக 7% உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை தனிப்பட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல்களின் அடிப்படையில் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி குமார் சங்கக்கார (ஒரு நாள் மற்றும் டெஸ்ட்), ரங்கன ஹேரத் (ஒரு நாள் மற்றும் டெஸ்ட்), டில்சான் (ஒரு நாள்), அஜந்த மெண்டிஸ் (ருவென்ரி-20), நுவான் குலசேகர (ருவென்ரி-20) ஆகியோர் மேலதிக கொடுப்பனவுகளை பெற்றுள்ள வீரர்கள்.

## ஆப்கான் அணிக்கு மிஸ்பா பாராட்டு



பந்து வீச்சு, களத்தடுப்பு என இரண்டு துறைகளிலும் ஆப்கானிஸ்தான் சிறப்பாகச் செயற்பட்டது. கத்திக்குட்டி அணியாக இருந்து எங்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியமை பாராட்டத்தக்கது என பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுகள் வீழ்ந்தபோது 200 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி விடலாம் என்று ஆப்கானிஸ்தான் அணி நினைத்திருக்கும். ஆனால் உமர் அக்மல் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். ஆப்கானிஸ்தான் பந்து வீச்சு அபாரமாக இருந்தது. சரியான திசையில், சரியான அளவில் பந்து வீசி எங்களுக்கு நெருக்கடியைக் கொடுத்தனர். அவர்களுக்கு எதிராக ஓட்டங்கள் எடுப்பது கடினமாக இருந்தது. அந்த அணி வீரர்களின் களத் தடுப்பு பாராட்டத்தக்க வகையில் இருந்தது.எமது பந்து வீச்சாளர்கள் சிறப்பான பங்களிப்பை அளித்தனர். குறிப்பாக சுழற்பந்து வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டதே வெற்றிக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

## ஆசிய கிண்ண கிரிக்கெட்
## இன்றைய ஆட்டம்



**பங்களாதேஷ் எதிர் ஆப்கானிஸ்தான்**

நேரம் : பிற்பகல் 1.30
இடம் : பங்களாதேஷ்

# ஆதாரமற்ற குற்றச்சாட்டு
# வோர்னருக்கு அபராதம்

(கேப்டவுன்)


தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் டிவில்லியர்ஸ் குறித்து அவதூறாக பேசிய அவுஸ்ரேலிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்ரேலிய அணி, 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டியில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றி பெற்றன. இரு அணிகள் மோதும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட், இன்று கேப்டவுனில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் போர்த் எலிசபெத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணி தோல்வியடைந்தது. இப்போட்டியின் போது தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் டிவில்லியர்ஸ், கையுறையைப் பயன்படுத்தி பந்தை சேதப்படுத்தினார் என வானொலிக்கு அளித்த பேட்டியில் டேவிட் வோர்னர் தெரிவித்தார்.

இதை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை மறுத்தது. அவுஸ்ரேலிய பந்து வீச்சு பயிற்சியாளர் கிரேக் மெக்டர்மாட், வேகப்பந்துவீச்சாளர் ஹரிஸ் ஆகியோர் இது போன்ற சம்பவம் நடக்கவில்லை என உறுதியாகக் கூறியுள்ளனர்.

இதையடுத்து ச்ர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) நடுவர்கள் தலைவர் ரோஷன் மகானாமா, டேவிட் வோர்னருக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 15 சதவீதம் (ரூ.1,78,502) அபராதமாக விதித்தார்.

இது குறித்து ஐ.சி.சி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சர்வதேச போட்டிகளில் நடந்த விடயத்தை எந்த ஒரு வீரரும் பொது இடங்களில் விவாதிக்கக் கூடாது. இதை வோர்னர் மீறியுள்ளார். போட்டியில் நடந்த சம்பவம் குறித்து எதிரணி வீரரை இழிவுபடுத்தியுள்ளார். இது முதல் தர விதி-மீறல் என்பதால், அவருக்கு அபராதம் மட்டும் விதிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.



# சூதாட்ட சர்ச்சையில் சிக்கிய
# நியூசிலாந்து முன்னாள் வீரர்

(டாக்கா)

கடந்த ஆண்டு நடாந்த பங்களாதேஷ் பிரிமீயர் லீக் ருவென்ரி-20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் அரங்கேறிய சூதாட்டம் குறித்து பங்களாதேஷ் தீர்ப்பாயம் விசாரணை நடத்தி வருகிறது. இதில் குல்னா ரோயல்ஸ் அணிக்காக விளையாடிய நியூசிலாந்து முன்னாள் துடுப்பாட்ட வீரர் 35 வயதான லூ வின்சென்ட்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். அவர் தன்னை சூதாட்டக்காரர் அணுகிய போதிலும் அதை ஏற்க மறுத்து விட்டதாக கூறினார். ஆனாூல் இந்த விடயத்தை உடனடியாக போட்டி அமைப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல் மறைத்த குற்றத்துக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிகிறது. பங்களாதேஷ் முன்னாள் கப்டன் மொகமட் அஷ்ரபுல், இன்னொரு சர்வதேச வீரர் ஆகிய மூன்று பேருக்கு இன்னும் 2 வாரத்தில் தண்டனை விபரம் அறிவிக்கப்படுகிறது.

# பாசையூர் சென். அன்ரனீஸ், குருநகர் பாடுமீன் துரையப்பாவில் இன்று பலப்பரீட்சை


சென். அன்ரனீஸ்


பாடுமீன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கினால் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும், குருநகர் பாடுமீன் அணியும் மோதவுள்ளன. இதேவேளை, சம்பியன்களின் சம்பியனின் இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது. இதில் விமானப்படை அணியை எதிர்த்து தரைப்படை அணி மோதவுள்ளது.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வின் போது இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ள அணிகளுக்கான பந்துகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. அத்துடன் மாலை 6.30 மணிக்கு மாபெரும் இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் கால்பந்தாட்ட இரசிகர்கள், ஆர்வலர்கள், விளையாட்டு நலன்விரும்பிகள் தவறாது கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப் படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற ஏற்பாடாகியிருந்த இப்போட்டி கன மழை மற்றும் பல்வேறு காரணங்களால் பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையில் இரசிகர்களின் நீண்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் இப்போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## அரச அதிபர் சைக்கிள் ஓட்டம் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண சைக்கிள் ஓட்டப் போட்டியில் நீலாம்ஸ்ரோங், வனஜா ஆகியோர் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டனர்.

யாழ். மாவட்ட செயலக நலன் புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஆட்டம் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. மாவட்ட செயலக முன்றிலில் ஆரம்பமான இப்போட்டி மீண்டும் மாவட்ட செயலக முன்றலில் நிறைவடைந்தது.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நீலாம்ஸ்ரோங், இரண்டாமிடத்தை கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. விஜயராசா, மூன்றாமிடத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கேசவேல், நான்காமிடத்தை மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த என். சதீஸ்வரன், ஐந்தாமிடத்தை பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. புவிராஜ், ஆறாமிடத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.சுதாகரன், ஏழாமிடத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எம். மிரோசன், எட்டாமிடத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். ரோமிசன், ஒன்பதாவது இடத்தை கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. பிரவீன், பத்தாமிடத்தை ரி. தங்கேஸ்வரன் ஆகியோர் பிடித்துக் கொண்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை நெடுந்தீவு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. வனஜா, இரண்டாமிடத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி. நிஷாந்தினி, மூன்றாமிடத்தை நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. மகீமா, நான்காமிடத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கல்யாணி, ஐந்தாமிடத்தை நெடுந்தீவு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். அகிலா, ஆறாமிடத்தை கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. லீலாவதி, ஏழாமிடத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வை. யாழினி ஆகியோர் பிடித்துக் கொண்டனர். (எஸ்.பி.)

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் சம்பியன்







(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் வதிரி டையமன்ஸ் அணியும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதியது. முற் பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின.

பிற்பாதி ஆட்டத்தில் தமது ஆட்ட வியூகத்தில் மாற்றத்தை மேற்கொண்ட நவஜீவன்ஸ் அணி 53ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இக்கோலை மணிவண்ணன் போட்டுக்கொண்டார். இதன் பின் உற்சாகத்துடன் செயற்பட்ட நவஜீவன்ஸ் அணி 64ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோலைப் போட்டு ஸ்திர நிலையைப் பெற்றது. இக்கோலை பசீலன் பெற்றுக்கொடுத்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் முனைப்புடன் டையமன்ஸ் அணி செயற்பட்டது. இதன் பயனாக 80ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்தி கோல் ஒன்றைப் போட்டுக் கொண்டது. இதன் பின் ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றபோதும் இரு அணிகளாலும் மேலதிகமாக கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக நவஜீவன்ஸ் அணி வீரர் மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டார். கிண்ணம் வென்ற அணிக்கு 15ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட அணிக்கு 10ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன நிறைவேற்று பணிப்பாளர் அனுரா டீ சில்வா, பொதுச்செயலாளர் உபாலி ஹேவகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டி நிகழ்வில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள், கழக தலைவர், செயலாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், இர சிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (90,48)

## வேம்படியில் இன்று மாவட்ட மட்ட வலைப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்படும் மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதல் சுற்று ஆட்டங்கள் இன்று காலை முதல் மாலை வரை நடைபெறும் எனவும், அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நாளைய தினம் நடைபெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## கபடிப் போட்டி

காரைநகர் பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு காரைநகர் யாழ்ரன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆண்,பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள அணிகளை உரியநேரத்திற்கு வருகை தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (85)

# மனோ கணேசன் தமிழ் மக்களின் பிரதிநிதியா அல்லது ஐ.தே.க.வின் பிரதிநிதியா?

- வானவில் 37 கட்டுரையிலிருந்து.



மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி நடைபெறப்போகும் மேல் மாகாணசபைத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்காமல் தனித்துப் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது. இதுபற்றி மனோகணேசன் பெருமையும் பட்டுக் கொண்டிருக்கிறார். அதுமாத்திரமின்றி, சில தினங்களுக்கு முன்னர் விடுத்த ஒரு அறிக்கையில் நீலம், பச்சை, சிவப்பு எல்லா நிறங்களுமே தமிழர்களைப் பொறுத்தவரை ஒன்றுதான் என வேதாந்தம் வேறு பேசியிருக்கிறார்.

அதன்மூலம் அவர் சொல்ல வருவது என்னவென்றால், தமிழர்களைப் பொறுத்தவரை சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் ஒன்றுதான், அவர்கள் ஒருவரையும் தமிழர்கள் நம்பக்கூடாது என்ற சங்கதியைத்தான்.

ஆனால் ஐ.தே.கவை தனது பூர்வீக நட்புச் சக்தியாக வரித்து வைத்திருந்த மனோ கணேசன், தான் தினசரி விடுக்கும் ஊடக அறிக்கைகளில் எடுத்ததெற்கெல்லாம் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைத் தாக்குவதை மட்டுமே தனது தொழிலாகக் கொண்டிருந்தார். ஆனால் இப்பொழுது நீலம் சிவப்புடன் பச்சையையும் (ஐ.தே.க) ஏகத்துக்கு வசை பாடியிருக்கிறார்.

ஐ.தே.கவுடன் அவருக்கு ஏற்பட்ட ஊடலுக்கு அரசியல் முரண்பாடு எதுவும் காரணமாக இருக்க முடியாது என்பதை, மனோ கணேசனை அறிந்தவர்கள் நன்கறிவர். ஏனெனில் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற மத்திய மாகாணசபைத் தேர்தலில் கூட, அவரது கட்சி வேட்பாளர்கள் ஐ.தே.க.வின் யானை சின்னத்தில்தான் போட்டியிட்டிருந்தனர். மனோ கணேசன் கூட ஐ.தே.கவின் சின்னத்தில் போட்டியிட்டே ஒருமுறை கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், ஒரு முறை அவர் ஐ.தே.கவுடன் முரண்படுவது போல சில விடயங்களைக் கதைத்த போது, அதுபற்றி ஊடகவியலாளர் ஒருவர் வினவ, ‘தன் கையாலேயே தன் கண்ணைக் குத்த முடியுமா?’ என வினவி, தானாவது ஐ.தே.க.வுக்கு எதிராகப் போவதாவது என்ற கோதாவில் பதில் அளித்திருந்தார்.

“சீ..சீ.. இந்தப் பழம் புளிக்கும்” என, திராட்சைப் பழத்துக்கு ஆசைப்பட்ட நரியொன்று, எவ்வளவோ முயன்றும் அது கிடைக்காத போது சலிப்புடன் சொன்னதாக ஒருகதை உண்டு. அந்த நிலைதான் இப்பொழுது மனோ கணேசனுக்கும் ஐ.தே.க சம்பந்தமாக ஏற்பட்டு இருக்கின்றது. அதற்குக் காரணம், மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தனது கட்சி ஆட்களுக்கு ஐ.தே.க. போதிய இடங்கள் ஒதுக்காததுதான் அக்கட்சி மீது மனோ கணேசனுக்கு வந்த கசப்பு.

உட்பூசல்களால் திண்டாடும் ஐ.தே.க.வின் பலவீனமான நிலையைப் பயன்படுத்தி, அக்கட்சியிடம் தனது கட்சிக்கு அதிக வேட்பாளர்களைப் பெற்றுக்கொள்ள மனோ கணேசன் திட்டமிட்டு இருந்திருக்கலாம். ஆனால் தனது கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாநகரசபை முதல்வர் முஸம்மில் அவர்களது பாரியாருக்கே வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுக்க முடியாத நிலையில் கோஷ்டி மோதல்களால் சீரழிந்து போயிருக்கும் அக்கட்சி, மனோ கணேசனின் ‘பொரிமாத்தோண்டி’ பேராசையை நிறைவேற்றுவது எப்படி?

மற்றும்படி ஐ.தே.கதான் தமிழர்களுக்கு எதிராக அனைத்து இனவன் செயல்களையும் நடாத்தியது என்பது பற்றியோ, யாழ். பொது நூலகத்தையும், யாழ். நகரத்தையும், யாழ்.தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனின் வீட்டையும் தீயிட்டுக் கொளுத்தியது என்பது பற்றியோ, இனப்பிரச்சினையை அக்கட்சி அரசுதான் யுத்தமாக மாற்றியது என்பது பற்றியோ, மனோ கணேசனுக்கு ஐ.தே.க.வுடன் எவ்விதமான முரண்பாடும் கிடையாது. மாகாணசபைத் தேர்தலில் தனது கட்சிக்கு போதிய இடம் ஒதுக்கப்படவில்லை என்பதுதான் அவருக்குள்ள ஒரே பிரச்சினை.

இன்னொரு விடயம், மேல் மாகாணத்தில் வாழ்கின்ற வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த அனைத்துத் தமிழ் மக்களுக்கும் தான்தான் ஏகப்பிரதிநிதி என்ற நினைப்பில்தான் மனோ கணேசன் தனது அரசியல் நடவடிக்கைகளை அங்கு முன்னெடுத்து வருகின்றார். வடக்கு கிழக்கு மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது மலையகத்தின் பிரதான கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரசோ, மேல்மாகாணத்தில் ஏதாவது தேர்தல்களில் போட்டியிட்டால், அவர்களைத் தனது பரம விரோதிகளாகவே மனோ கணேசன் நோக்குவார்.

உதாரணமாக, சில வருடங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சி கொழும்பில் தனது கிளையொன்றை அமைத்த போது, அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அறிக்கை விட்டார்.

இந்த இலட்சணத்தில், எல்லாத் தமிழ் மக்களும் அரசாங்கத்துக்கு எதிராக (ஐ.தே.க வுக்கு எதிராக அல்ல) ஐக்கியப்பட வேண்டும் என அடிக்கடி அறிக்கைப் போர் மட்டும் நடாத்திக் கொள்வார். உண்மை என்னவெனில், மனோ கணேசன் தமிழ் மக்களின் எந்தவொரு பிரிவினரதும் பிரதிநிதி அல்ல. அவர் ஏகாதிபத்திய சார்பானதும், பிற்போக்கானதும், தமிழின விரோதமானதுமான ஐ.தே.கவின் பிரதிநிதி மட்டுமே. அவர் போடும் தமிழின காப்பாளன் வேசம் ஒரு கவசம் மட்டுமே.

எனவே எதிர்வரும் மேல்மாகாணசபைத் தேர்தலில் மேல் மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்களின் நன்மை கருதி, மனோ கணேசனின் வேட்பாளர்களைத் தோற்கடிக்கும் கடமையை அங்கு வாழும் தமிழ் மக்கள் நிறைவேற்ற வேண்டும். பணபலத்தாலும், ஊடகப் பிரசாரத்தாலும், ஐ.தே.க பின்னணி ஆதரவாலும் தமிழ் மக்களை ஏமாற்றி விடலாம் என மனப்பால் குடிக்கும் மனோ கணேசனின் கபட நோக்கத்தைத் தவிடுபொடியாக்குவது மானமுள்ள ஒவ்வொரு மேல் மாகாணத் தமிழனதும் தலையாய பணியாகும்.

# கூறுகிறேன்... முடிந்தால் கேளுங்கள்

- வ.ஸ்ரீநிவாசன் -



எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். என்னை விட 7, 8 வயது இளையவர். நிறையப் படித்தவர். பல பட்டங்கள் வாங்கியவர். கதை, கவிதை தவிர கட்டுரை நூல்களையும் படிப்பவர். கல்லூரிகளில் மேலாண்மை வகுப்புகள் எடுப்பவர். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் படிக்கும் ஆச்சர்யமானவர். அவர் ஒரு முறை சொன்னார். “சாண்டில்யன் கதைகள் நல்ல கதைகள். அவர் பல ஆராய்ச்சிகள் செய்து நிறைய வரலாற்றுத் தகவல்களின் பேரில் கதைகளை எழுதியிருக்கிறார். இன்றைக்கும் அவரது நூல்கள் பெரிதும் விற்பனை ஆகின்றன.”

சாண்டில்யனின் கதாநாயகி, ஏதோ ராஜகுமாரி, அழகிய மஞ்சத்தில் குப்புறப் படுத்துக் கொண்டு சாளரத்தின் வழியே வழியும் நிலவொளியில் மயங்கி மையல் வசப்பட்டு இருப்பதை ஒரு கதாநாயகன் அவளறியாமல் பார்த்து, அவளது பின்னம் பக்கங்களில் வைத்த தன் கண்களை எடுக்கவொண்ணாமல் தவிப்பது போன்ற வர்ணனைகளை முதலில் சில தடவை விறுவிறுப்போடு படித்து விட்டு அவர்கள் இருவரும் அடுத்த அத்தியாயத்தில் அதற்கு மேல் ஒன்றும் செய்யாமல் இருந்ததால் சாண்டில்யனைப் படிப்பதையே விட்டு விட்ட எனக்கு இதில் உடன்பாடு இல்லையெனினும் நாகரிகம் கருதியும் மேலும் படிக்காமலேயே ஒருவரை விமர்சிக்க நானென்ன தமிழில் புகழ் பெற்ற அறிவு சீவிகளிலொருவனா என்கிற ஆத்ம ஞானத்தின் காரணமாகவும் மறுக்கவில்லை.

அப்புறம் தொடர்ந்தவர் “பயணக் கட்டுரைகள் என்றால் மணியன்தான் சார்” என்றார். அவர் அப்படி சொன்னதும், தீவிர இலக்கிய வாசகர்கள் “எங்கே இட்லி கிடைக்கும்” என்பதை எழுதுவதா பயணக் கட்டுரை என்று வாங்கு வாங்கென்று விளாசியிருப்பது நினைவுக்கு வந்தது. அப்புறம் சாண்டில்யன் மாதிரி மணியனை விட்டு விடக் கூடாது இதுபற்றி ஒரு ஆய்வு செய்ய வேண்டும் என்று துணிந்தேன்.

மணியனின் பயணக் கட்டுரைகளையோ, வேறு எழுத்துகளையோ நான் படித்ததில்லை. ஆனால் அவர் “எங்கே என்ன சாப்பிடக் கிடைக்கும்” என்று எழுதியிருந்தால் அதில் என்ன தவறு என்பது எனக்கு உண்மையாகவே தெரியவில்லை. பலர் பயணக் கட்டுரை எழுதுபவர்களை “நல்ல வேளை, சாப்பாடு பற்றி எழுதிவிடுவீர்களோ” என்று பயந்தேன் என்று புகழ்வதை அடிக்கடி கண்டிருக்கிறேன். சாப்பாடு என்ன மேலை நாட்டினரைப் போல நமக்கு கைகளால் தீண்டத் தகாததா? அதிலும் இட்லி. இட்லி பிடிக்காத தமிழன் உண்டா? இட்லி பற்றி எவ்வளவோ சொல்லலாம். நம் வழக்கத்துக்கும் மரபுக்கும், நம் குருமார்களுக்கும் ஏற்ப ஓர் ஆராய்ச்சி. இட்லி என்கிற மூன்றெழுத்தில் ஓர் உயிர் எழுத்து, ஒரு மெய்யெழுத்து, ஓர் உயிர் மெய் எழுத்து இருக்கிறது. இதிலிருந்தே இது தமிழன் உணவு என்பது புலனாகவில்லையா?

ஒரு ஊருக்குப் போகிறவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யாமல் இருக்க முடியும். ஆனால் சாப்பிடாமல் இருக்க முடியுமா? எல்லோருக்கும் சொந்தக் காரர்களோ நண்பர்களோ எல்லா ஊர்களிலும் இருப்பார்களா? எனவே எங்கே நல்ல சாப்பாடு கிடைக்கும் என்பது அவசியம் தெரிய வேண்டும். அது இணையத்தில் கிடைக்கும், பத்திரிகைகளில் கிடைக்கும் என்பீர்கள். அவை யெல்லாம் எல்லாராலும் தேட முடியுமா? பயன்படுத்தத் தெரியாதவர்களுக்கென்றுதான் பயணக் கட்டுரைகள், பயண நூல்கள். அதில் அவசியம் பதிவாக வேண்டியது “எங்கே நல்ல சாப்பாடு கிடைக்கும்” என்பதுதான்.

உலகத்தில் எது அதி முக்கியமானதோ அது இகழப்படும் என்பது வழக்கு. பெண்கள், உணவைப் பயிரிட்டுத் தரும் விவசாயிகள், துப்புரவுத் தொழிலாளர்கள் - இவர்களெல்லாம் இல்லாமல் அமையாது உலகு. ஆனால் காலம் காலமாக ஏச்சுக்கும், பேச்சுக்கும், சுரண்டலுக்கும் ஆட்பட்டு வருபவர்கள் இவர்கள். அதே மாதிரி இட்லியின்றியும் அமையாது உலகு. ஆனாலும் தமிழ் “ரைம்”களில், சொலவடைகளில் “தோசை”க்கு இருக்கும் இடம் இட்லிக்கு இல்லை. அதுதான் உலகம்.

# அஃகம் சுருக்கேல் ஔவியம் பேசேல் 1

நாஞ்சில் நாடன்

ஔவை எனும் தமிழ்க் கிழவி, "அறம் செய விரும்பு" தொடங்கி "ஓரம் சொல்லேல்" ஈறாக ஆத்திசூடி எழுதுகிறார். இந்த ஔவையார் புற நானூறு முதலாம் சங்கப்பாடல்களில் இடம்பெற்ற ஔவையார் அன்று. சங்க கால ஔவை பாடிய பாடல்கள் மொத்தம் 59. அவரால் பாடப்பெற்றோர் 17 மன்னர்களும் மற்றவர்களும். சேரமான் மாரி வெண்கோ, பசும்பூட் பொறையன், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, கைவண் கிள்ளி, பாண்டியன் கானப்போர் தந்த உக்கிரப் பெருவழுதி, அதியமான் நெடுமான் அஞ்சி, அதியமான் அஞ்சி மகன் பொக்குட்டு எழுனி, எழுனி, தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், பாரி, முடியன், அதியர், கோசர், மழவர், வெள்ளிவீதி, பரணர். பரணர் போல சங்க புலத்தினுள் வெள்ளிவீதியார் புகழ் பெற்ற புலவர். பெண்பாலர். அவர் எழுதிய பாடல்கள்,

அக நானூறு - 2
குறுந்தொகை - 8
நற்றிணை - 3

எனப் பதின்மூன்று. ஔவை எனும் பெண்பால் புலவர் மற்றொரு பெண்பால் புலவரான வெள்ளிவீதியாரைப் பாடினார் என்பது இன்றைய இலக்கியச் சூழலில் வியப்பளிப்பது.



ஆத்திசூடி எழுதிய ஔவை பிற்காலத்தவர். கம்பர் முதலாய் புலவர் பெருமக்கள் வாழ்ந்த காலத்துப் புலவர் இவர் என நம்பப்படுகிறார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை, பந்தனந்தாதி எனும் நூல்களும் பல தனிப்பாடல்களும் இந்த ஔவைக் கணக்கில் சேரும்.

இவருக்குப் பின்னர் இன்னுமொரு ஔவை இருந்திருப்பதாகத் தெரிகிறது.

ஆத்தி சூடி மொத்தம் 108 நூற்பாக்கள், அதாவது சூத்திரங்கள். அதென்ன கணக்கு நூற்றெட்டு?

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் உயிரேறிய க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ் எனும் ஒன்பது மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்களாம், என்கிறார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், தமது "இலக்கண வினா-விடை" எனும் நூலில். அவர் தரும் எடுத்துக்காட்டுகள்:

அணி, ஆடை, இலை, ஈரல், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐயம், ஒளி, ஓடு, ஔவை,

கரு, சரி, தயை, நன்மை, பந்து, மணி, வயல், யமன், ஞமலி

12 ஒ 9 ஸ்ரீ108 என்பது ஔவையின் கணக்கா என்றால் இல்லை. மேற்சொன்ன ஒழுங்கில் எல்லா எழுத்துக்களுக்கும் ஆத்திசூடி எழுதப்படவில்லை. ஆத்திசூடி 108 என்றாலும், நூற்பாக்களின் மொழி முதலாக, ஔவை பயன்படுத்திய எழுத்துக்கள்,

அ -6, ஆ "1, இ -6, ஈ -1, உ -2, ஊ -2, எ -1, ஏ -1, ஐ -1, ஒ -2, ஓ -2, ஔ -1 என 26. மேலும், க-வரிசை -12, ச-வரிசை -12, த-வரிசை -12, ந-வரிசை -12, ப-வரிசை "12, ம-வரிசை -12, வ-வரிசை -8, ஞ-வரிசை 1 என 81.

ய-வரிசை பயன்படுத்தப்படவில்லை. ஆனால், இலக்கண வினா-விடை குறிப்பிடாத ங-வரிசை -1 ஆக 108 நூற்பாக்கள்.

ஆத்திசூடியின் சிறப்பு சின்னஞ்சிறு நூற்பாக்களால் ஆன நூல் என்பது. சூத்திரங்கள் போன்றவை. இந்நூலுக்கு உரை விளக்கம் எழுதிய நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார், இது போன்ற நூல் எழுத பெருங்கருணையும் பேரறிவும் வேண்டும் என்கிறார்.

"மன்னனில் கற்றோன் சிறப்புடையன்" என்று சொல்லும் துணிச்சலும் கொண்டவர் ஔவை. ஆத்திசூடியின் பல நூற்பாக்கள், என்னை இளம் பருவத்தில் இருந்தே கவர்ந்தவை. அவற்றுள் ஒன்று, 31ஆவது நூற்பா, -அனந்தல் ஆடேல்". அனந்தல் எனும் சொல்லுக்கு அகராதி உறக்கம் என்று பொருள் தரும். இன்னொரு பொருள் மயக்கம். மூன்றாவது பொருள் மந்த ஒலி. ஆண்டாள் திருப்பாவையின் ஒன்பதாவது பாடலில், "என் மகள் தான் ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?" என்கிறார். இங்கு அனந்தல் என்பதற்கு ஆழ்ந்த உறக்கம் என்பது பொருள். "அனந்தல் ஆடேல்" என்றால் உறக்கத்தை மிகுதியாகக் கொள்ளாதே என்று பொருள் தருகிறார்கள்.

இனியொன்று, 54ஆவது நூற்பா. "தக்கோன் எனத் திரி". தக்கவன் என்று பெரியோர்கள் உன்னைப் புகழும்படி நடந்து கொள். தக்கோன் என வாழ்ந்து செம்மாந்து நட. இதை இளைஞர்கள் கருத்தில் கொள்வது நல்லது.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்பது நடுவு நிலைமை அதிகாரக் குறள், 114.

"ஒருவர் தகுதி உடையார் அல்லது தகுதி இல்லார் என்பது அவருடைய புகழால் அல்லது இகழால் அறியப்படும்" என்பது வ.உ.சி உரை.

23ஆவது நூற்பா, "மன்று 'பறித்து உண்ணேல்". நீதிமன்றத்தில் இருந்துகொண்டு, தீர்ப்புக்கு என வழக்குடன் வரும் குடிமக்களின் பொருளைக் கவர்ந்துகொண்டு வாழாதே என்பது பொருள். அஃதாவது, நீதித்துறைக்காரர்கள் - அமைச்சர், அதிகாரிகள், நீதிபதிகள், ஊழியர்கள் எவரும் கையூட்டு வாங்கக்கூடாது என்கிறார் ஔவை.

தொன்மை மறவேல்.
நன்றி மறவேல்.
அறனை மறவேல்.
சீர்மை மறவேல்.
தோற்பன தொடரேல்.
போர்த் தொழில் புரியேல்.
பூமி திருத்தி உண்.
சூது விரும்பேல்.

என்பன, மாதிரிக்காக சில.

ஆனால், இந்தக் கட்டுரையின் நோக்கம், தமிழின் புறக்கணிக்கப்பட்ட இரண்டு உயிரெழுத்துக்களில் ஒன்றான / எனும் எழுத்துப் பற்றியது. மற்றொன்று ஔ.

(தொடரும்)

# தீவக அபிவிருத்தியில் கவனத்துக்குரிய விடயங்கள்

- சாலையூரான் -



90களின் ஆரம்பத்திலிருந்து தீவகம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த காலம் முழுக்க போர் நெருக்கடிகளால் தவித்த மக்களுக்கான அனைத்து அத்தியாவசிய உதவிகளையும் தீவகத்தில் அப்போது செயற்பாட்டில் இருந்த ஈழமக்கள் ஜனநாய்கக் கட்சி மேற்கொண்டுவந்திருந்தமை யாவரும் அறிந்த விடயம்.

அதன் ஒரு பிரதிபலிப்பாகவே தீவகத்தில் கடைசியாக இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மூன்று பிரதேச சபைகளை கைப்பற்றிக்கொள்ளும் வாய்ப்பையும் அக் கட்சி பெற்றிருந்தது.

இருந்தும் அதன் பின்னரான மூன்று ஆண்டுகால இடைவெளியில், 8000 வாக்குகளில் பாதியள்வையே ஆளும்கட்சி வேட்பாளர்கள் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பெற்றுக்கொண்டிருப்பது அரசுத்தரப்பின் அப்பகுதிக்கான மக்கள் நலப்பணிகளை மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிநிற்கிறது.

இறுதியாக தீவகத்தின் மூன்று பிரதேச சபைகளுக்கும் தலா 100 மில்லியன் ரூபாவை தீவகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக அரசு ஒதுக்கி அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதும் தீவகத்தின் தேர்தல் முடிவுகள் ஆளும் தரப்புக்கு ஏன் சாதகமாக அமையவில்லை என்பது முக்கியமான கேள்வியாகும்.

முதலாவது தீவகம் தழுவி அதற்கான தேசிய ரீதியிலான அபிவிருத்தி முன்மொழிவுகளில் முழுமக்களதும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதல் என்கிற விடயம் எவ்வாறு நடைபெற்றிருக்கிறது என்பது.

அடுத்தது தீவகத்தின் வாழ்வாதாரம் என்பது, கடலுணவு மற்றும் பனை சார்ந்த உற்பத்தி விநியோகங்களை அடிப்படையாகக்கொண்டு கட்டமைக்கப்பட்டிருப்பதால் அதன் மூலமாக அங்குள்ள மக்களின் வாழ்க்கை வருமானங்களை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் அந்த மக்களின் குறிப்பான வாழ்க்கை நிலைமைகளில் இருந்து முன்னெடுக்கப்பட்டனவா என்பது.

போர்ச்சூழலிலும் அதன் பின்னரும் வெறுமனே தமது அசைவற்ற ஆதனங்களை பேணிக்கொள்ளும் வகையிலான குடியேறும் முயற்சிகளுக்கு புறம்பாக உற்பத்தி சார்ந்த முதலீடுகளுக்கான ஆர்வங்கள் தீவகத்தை நோக்கி வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததையும் அவற்றை ஊக்குவிக்கும் முயற்சிகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதனைவிட பயிர்ச்செய்கைக்கான சில பிரதேசங்களின் உற்பத்திக்கான ஊக்குவிப்புக்கள், அங்குள்ள முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் குறிப்பான நிலைமைகளில் இருந்து எதிர்கொள்ளும். தடைகள், சிரமங்களை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் என்பனவும் கவனிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தீவகத்துக்கென பாரிய ஒதுக்கீடுகள் அரசுத்தரப்பால் செய்யப்பட்டிருந்தபோதும், அதைக்கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திக்காக பரந்துபட்ட கருத்தாடல்கள் மூலம் அபிப்பிராயங்களை பிரதேச மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

இதில் முன்னணி அரசியல் செயற்பாட்டாளர்கள் அங்குள்ள உள்ளூரமைப்புக்களின் ஆலோசனைகளை ஏற்று, அதிகாரிகளுடன் அபிவிருத்திகளை நெறிப்படுத்துவதில் எந்தளவுக்கு இணைந்து வழிப்பட்டார்கள் என்பது கேள்வி.

மொத்தத்தில் தீவகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திகள் எத்தகைய வழிமுறைகளில் முன்னெடுக்கப்பட்டன என்பதற்கப்பால் அங்கு களத்தில் பணியாற்றிய அதிகாரிகளுடன் சேர்ந்து பிரதேச மக்களும் இந்த முன்னெடுப்புகளை நிராகரித்து விட்டதாக தோன்றுகிறது.

ஏனைய பிரதேசங்களைவிட தீவகத்தின் வாக்கு வங்கி குறைவடைந்தமை என்பது, அரசுத்தரப்பின் இதுவரையான அதன் தீவகப்பணிகளை ஒரு முறையான மீள்பரிசீலனைக்குட்படுத்த வேண்டியதன் அவசியத்தை குறிப்பாக சுட்டிநிற்கிறது.

# பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அசிரத்தையினால் அல்லலுறும் இலட்சக்கணக்கான யாழ் குடாநாட்டு நோயாளர்கள்

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள திணைக்களத்தின் கீழுள்ள முக்கிய மருத்துவமனைகளான தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை மற்றும் மந்திகை ஆதார வைத்தியசாலை உள்ளிட்ட பெருமளவு வைத்தியசாலைகளில் சாதாரண மருந்துகள் முதற்கொண்டு உயிர் காக்கும் மருந்துகள் வரை மற்றும் அத்தியாவசியமான மருந்துவ உபகரணங்கள் எதுவும் பெரும்பாலான சமயங்களில் இருப்பதில்லை இவர்களின் நிாவாகத்தின் கீழுள்ள முக்கிய மருத்துவமனை ஒன்றின் வைத்தியர் என்ற ரீதியில் இதற்கான காரணங்களையும் இதனால் நோயாளர் எதிர்நோக்கும் சொல்லொணா துயரங்களையும் ஊடகஙகள் வாயிலாக மக்களுக்கு வெளிப் படுத்துகின்றேன்.

### நோயாளர் எதிர்கொள்ளும் பாதிப்புகள்

◆ ஒவ்வொரு வைத்தியசாலையின் கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவிற்கு வருகை தரும் நோயாளர்கள் தமது பிரயாணத்திற்கு குறிப்பிட்ட தொகைப்பணத்தை செலவிடுவதோடு மிக நீண்டநேரம் வரிசையில் காத்திருந்த பின்பே வைத்தியரைச் சந்திக்க முடியும். ஆயினும் அதற்கு பதிலீடாக வைத்தியசாலைகளில் பெரும்பாலான நேரங்களில எந்த மருந்தையுமே (பனடோல் உட்பட) வழங்கமுடியாத நிலையே உள்ளது இதனால் நோயாளர்கள் மாத்திரமின்றி வைத்தியர்களும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

◆ வைத்தியர்களால் பரிந்துரைக்கப் படும் மருத்தை குறிப்பிட்ட சில தொகையான வசதியுள்ள நோயாளர்களால் மாத்திரமே வெளிமருந்தகங்களில் கொள்வனவு செய்ய முடியும் இதனால் பாமர ஏழை மக்களின் நோய் தீவிரமடைவதோடு உயிரிழப்புகளையும் சந்திக்க நேரிடுகிறது.

◆ இதனால் இயல்பாகவே மிகக் குறைவான மருத்துவ அறிவைக்கொண்டுள்ள மற்றும் மூடநம்பிக்கைகளால் கட்டுண்டுள்ள யாழ். குடாநாட்டு மக்கள் மென மேலும் மிகக்குறைந்த செலவில் வைத்தியம் செய்யும் போலி மருத்துவர்கள் பால் ஈர்க்கப்பட்டு உயிரிழப்புகளைச் சந்திக்கும் தன்மை மென்மேலும் அதிகரிக்கும்.

◆ யாழ். போதனா வைத்தியசாலை பெருமளவு சனநெருக்கடிகளையும் சாதாரண பொதுமகனுக்கு சிக்கலான தன்மையைக் கொண்டுள்ளதாலும் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் நோயாளர்களுடன் கடுமையாக நடந்துகொள்வதாலும் தமது வசிப்பிடத்துக்கு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் தங்கிச்சிகிச்சை பெறுவதற்கே பெரும்பாலான நோயாளர்கள் விரும்புகினறார்கள். அத்துடன் தூர இடங்களிலிருந்து யாழ்.நகருக்கு தினமும் நோயாளியைப் பார்வையிடச் செல்வதற்கு ஏற்படும் பிரயாண மற்றும் ஏனைய செலவுகளையும் ஏழை மக்களால் தாங்கமுடியாது.

◆ ஆயினும் யாழ். பிராந்திய வைத்தியசாலைகளில் தெல்லிப்பளை மற்றும் மந்திகை ஆதாரவைத்தியசாலைகள் மாத்திரமே உயிர்காக்கும் மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் வசதிகளை ஓரளவுக்கேனும் கொண்டுள்ளன. ஆயினும் அவ் வைத்தியசாலைகளில் பெரும்பாலான நேரங்களில் அவசியமான நோயெதிர்ப்பு மருந்துகள் மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் எதுவும் இருப்பதில்லை. இதனால் சாதாரண நோய்கள் மற்றும் சத்திரசிகிச்சைகளுக்குகூட பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நோயாளர் காவுவண்டியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றனர். இதில் நோயாளர்களுக்கு மாத்திரமின்றி யாழ். போதனா வைத்தியசாலைக்கும் கடுமையாக நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

◆ இதில் பரிதாபத்திற்குரிய விடயம் என்னவெனில் இத்தகைய மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடும் அம்புலன்ஸ் வாகனங்களின் எரிபொருள் செலவுகக்கு மாத்திரமே பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் மாதாந்தம் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையில், தண்டமாக வீணாக்கப்படுகிறது இப்பணத்தில் இவர்கள் தேவையான மருந்துகளையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்யாதிருப்பார்களேயாயின் தற்போது நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடிகளையும் உயிரிழபபுகளையும் பெருமளவு குறைக்க முடிந்திருக்கும்.

மேற்படி தட்டுப்பாடுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பல்வேறு மந்தமான மற்றும் தூர நோக்கற்ற செயற்பாடுகள் காரணமாக இருப்பினும் அதற்குரிய மிக முக்கிய காரணத்தை ஆராயவும் அதற்குரிய தீர்வினை வழங்கவுமே இக்கட்டுரை வரையப்படுகிறது.

### மிகப்பலவீனமான செயற்றிறனற்ற யாழ். பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவும் உயிரி மருத்துவர் பிரிவும்

யாழ்.பிராந்திய வைத்தியசாலைகள் அனைத்திற்கும் தேவையான மருந்து வகைகள் மருத்துவ உபகரணங்கள் யாவும் இவ்விரு பிரிவுகள் ஊடாகவே நடைபெறுவதோடு அவற்றின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கும் இவையே பொறுப்பு.

### யாழ். பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவு

யாழ். பிராந்திய வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொழும்பிலுள்ள தலைமை வழங்கல் பிரிவிலிருந்து தேவைக்கேற்ப கட்டளை அனுப்பிப் பெற்றுக்கொள்வது அவற்றை அனைத்து வைத்தியசாலைகளுக்கும் பகிர்ந்து வழங்குவது இச் செயற்பாடுகள் தொடர்பான பதிவுகளை கிரமமாக பேணுவது என்பனவே இப்பிரிவின் செயற்பாடாகும் மருத்துவ சேவைகளின் உயிர்நாடியான இப்பிரிவு பல துறைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு மருந்தாளர்களின் கீழ் செயற்படுவதே வழமையாகும். யாழ். போதனா வைத்தியசாலையில் இப்பிரிவு பத்துக்கும் மேற்பட்ட மருந்தாளர்களால் இயக்கப்படுகிறது.

ஆயினும் பரிதாபத்திற்குரிய யாழ். பிரிவைப் பொறுத்தவரை அது மூன்று முகாமைத்துவ உதவியாளர்களினால் மாத்திரமே இயக்கப்படுக்கிறது மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான எவ்வித அடிப்படை அறிவைக்கூட கொண்டிராத இவர்கள் மிகக்குறுகிய கால பயிற்சியின் பின்னர் இப்பிரிவைக் கொண்டு நடத்துமாறு தனித்து விடப்பட்டுள்ளனர்.

ஓய்வு ஒழிச்சலற்ற கடுமையான வேலைத்தலமான பல உயிர்களை காபபாற்ற வேண்டிய பொறுப்புள்ள ஒரு பிரிவு யாழ். பிராந்திய சுகாதாரப்பணிமனையின் மனிதநேயமற்ற கவனிப்பாரற்ற தன்மையினால் மருத்துவதோடு எவ்வித சம்பந்தமுமற்ற மூன்று பணியாளர்களால அவர்களுடைய சக்திககு அப்பாற்பட்டு கடும் நெருக்கடிகளின் இயக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து அரச அலுவலகங்களும் அவற்றின் தேவைக்கு பன்மடங்கு அதிகமான முகாமைத்துவ பணியாளர்களைக் கொண்டு இயங்கும்போது அவை எல்லாவற்றையும் விட முக்கியமான ஓர் அலுவலகம் ஏன் பிராந்திய சுகாதாரப்பணிப் பாளருக்கு மாத்திரமே தெரிந்த விடயமாகும் (உண்மையான மனிதத்தேவை பத்திற்கும் மேற்பட்டதாகும்).

கொழும்பிலுள்ள தலைமை வழங்கல் பிரிவானது யாழ்ப்பாணத்திற்கு தேவையான அனைத்து மருத்துவகைகள் மறறும் உபகரணங்களையும பெரும்பாலான நேரங்களில் தேவையான அளவிற்கு வழங்கக்கூடிய நிலையிலே உள்ளது என்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஆயினும் மருத்துவத்தோடு தொடர்பற்ற பணியாளர்கள் தமது அறியாமை காரணமாகவும் அதிகரித்த வேலைப்பளு காரணமாகவும் தேவையானளவு மருந்துகளை தேவையான நேரத்தில் கட்டளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளாமையே யாழ்ப்பாணத்தில் மருந்து தட்டுப்பாட்டிற்குரிய பிரதான காரணமாகும்.

அதைவிடவும் வேதனையான விடயம் யாதெனில், அவ்வாறு கொழும்பிலிருந்து பெறப்படும் மருந்து வகைகளையும் தமது அதிகரித்த வேலைப்பளுவின் காரணமாக வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்காமல் களஞ்சியத்திலே முடக்கி வைக்கப்பட்டுள்ளன இதில் நகைப்பிற்குரிய விடயம் யாதெனில் இவை யாவும் சுகாதாரத்துறையோடு தொடர்புடைய உயர் அதிகாரிகளுக்கு தெரியுமா என்பதுவேயாகும் நோயாளர்களும் வைத்தியசாலைகளும் மருந்தின்றி தவித்துக்கொண்டிருக்கையில் மக்களுடைய வரிப்பணத்தில் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட கோடிககணக்கான பெறுமதியான மருந்துகள் பொறுப்பற்ற விதத்தில் களஞ்சியசாலையில் முடக்கப்பட்டுள்ளன (தற்போது சிறியளவில் விநியோகம் தொடக்கப்பட்டுள்ளது வேறு விடயம்).

இதற்கு ஒரு படி மேலே சென்று (RMSD) இன் சத்திரசிகிச்சை உபகரணஙக ளிறகு பொறுப்பானவரின் நடவடிக்கைகள் அநாகரிகமானதும் மனிதநேயமற்றது மாகும் எந்த வைத்தியரோ அல்லது மருந்தாளரோ அவருடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொண்டு தேவையான ஒரு உபகரணம் (RMSD) இல் உள்ளதா எனக்கேட்டால் அதற்கு எவ்வித தயககமுமின்றி எப்போதுமே அவரது வாயிலிருந்து வரும பதில் இல்லை என்பதாகும் ஆயினும் களஞ்சியத்திற்கு நேரடியாக சென்று பார்ப்பின் மேற்படி உபகரணங்கள் மிகையான அளவில் வெளிப்படையாக களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதை காணலாம். ஆயினும், அவரது பதிலைப் பொருட்படுத்தாமல் ஏழை நோயாளர்களை கருத்திற்கொண்டு RMSD இற்கு நேரடியாகச் சென்று தேவையான உபகரணங்களை கொண்டு வரமுயற்சிக்கும வைத்தியர்களும் பிரதான மருந்தாளர்களும் அவரால் மோசமான முறையில் அலட்சியப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தும் சம்பவங்கள் RMSD பல முறை இல் ஏற்கனவே உள்ள நோயாளியின் உயிர்காக்கும் உபகரணங்களை இல்லை என்று கூறும் இரக்கமற்ற அதிகாரத்தை இவருக்கு யார் வழங்கினார்கள் என்பது கேள்விக்குறியாகும்.

### தீர்வுகள்

RMSD ஆனது இதன் முக்கியத்துவம் கருதி ஏனைய இடங்களில் நடைமுறையிலுள்ளவாறு மருத்துவ அறிவுடைய துறைசார்ந்த மருத்தாளர்களாலேயே நிர்வகிக்கப்படவேண்டும். அவர்களுக்கு உதவியாக அலுவலகத்தேவைகளின் பொருட்டு போதுமானளவு முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

இப்பிரிவின் ஆகக்குறைந்த மனிதவலு பத்திற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். இலுள்ள (RMSD மருந்து வகைகள் மற்றும் உபகரணங்கள் புதிதாக வரும் புதியவகை மருந்துகள் மற்றும் உபகரணங்கள் யாவும் தொடர்புடைய வைத்தியர்கள் மற்றும் பிரதான மருந்தாளர்களுக்கு காட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

நோயாளர் நன்மை கருதி தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங் களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வைத்தியர்கள் மற்றும் மருந்தாளர்கள் (RMSD) உடன் தொடர்புகொள்ளும்போது அவாகளை அலட்சியப்படுத்தாமல் தேவையானவற்றை விரைவாக குறித்த வைததியசாலைகளுக்கு அனுப்பும் வகையில் பணியாளர்களின் நடத்தையில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்.

### மருத்துவ உயிரியல் பிரிவு

யாழ். பிராந்திய வைத்தியசாலைகளின் பல்வேறு முக்கியமான தேவைகள் இவர்களினாலேயே நிறைவேறறப்படல் வேண்டும் வைத்தியசாலைகளுக்குத் தேவையான பெறுமதியான மருத்துவமின் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் இவர்களினாலேயே கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப் படுவதோடு அது தொடர்பான பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளும் இவர்களினாலேயே மேற்கொள்ளப் படல் வேண்டும் (ஆயினும் இங்கே அது முற்றிலும் நடைபெறுவதில்லை).

### வைத்தியசாலைகளின் மின்விநியோகம் மற்றும் பராமரிப்பு வேலைகள்

நீர்வழங்கல் கழிவகற்றல் மற்றும் அது தொடர்பான பராமரிப்பு வேலைகள் சிறிய கட்டட மற்றும் தளபாட திருத்த வேலைகள் யாவும் இவர்களினாலேயே மேற்கொள்ளப்படல் வேணடும். ஆயினும் நடைமுறையில் இப்பிரிவானது முற்றிலும் செயலிழந்த கவனிப்பாரற்ற ஒரு பிரிவர்கும் விரல்விட்டு எண்ணக் கூடிய பணியாளர்களுடன் பெயரிற்கு மாத்திரம் இப்பிரிவு இயங்குவதைக் காணலாம்.

இப்பிரிவிற்கென நிதி ஒதுக்கீடுகள் எதுவும் பெரியள்வில் இல்லையென்பதாலும கொள்வனவு அதிகாரங்கள் இல்லை என்பதாலும் சுகாதார அமைச்சினால கொள்வனவு செய்யப்படும் மற்றும் நன்கொடையாக வழங்கப்படும் மற்றும் தளபாடங்கள் அனைத்தும் அதனுடன் சிறிதும் தொடர்பற்ற RMSD இன் ஊடாகவே விநியோகிக்கபபடுகின்றன வடமாகாண சுகாதார அமைச்சின் இற்கு பொறுப்பாக ஓர் பட்டதாரி முதன்முறையாக அண்மையில் நியமனம் பெற்றுள்ள போதும் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

இப்பிரிவில் பணியாற்றும் ஊழியர்கள் கூட பெரிய மற்றும் சிக்கலான மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் எவ்வித அறிவும் அற்றவர்களாகவே உள்ளனர்.

எனவே யாதாயினும் உபகரணஙகள் பழுதுபடும் பட்சத்தில் அவற்றின் விநியோகஸ்தர்கள் பெரும் பணச்செலவில் அதிக காலதாமதத்தின் பின்னர் (சாதாரணமாகவே பல மாதங்களிலிருந்து வருடங்கள் வரை செல்லும்)கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்டு திருத்த வேலைகள் செய்ய வேண்டிய நிலைமையுள்ளது ஆயினும் இவர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மிகக்குறைவென்பதால் சிறிய சாதாரண பிழைகளுக்காகவே பல இலட்சம் ரூபாயகள் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கழித்து விடப் படுகின்றன. - வைத்திய அதிகாரி

# யாழ்.நீரேரியில் ஏப்ரல்முதல் வலைகள், டைனமற்றுக்குத் தடை

## கடற்றொழில் நீரியல்வள உதவிப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடல் நீரேரிப்பகுதியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து சிறகு வலை, கூடுவலை, இளுவை மடி மற்றும் டைனமற் தொழில் நடவடிக்கைகள் தடைசெய்யப் படவுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேச மூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். கடற்றொழில் நீரி யல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் தலை மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட கிராமிய கடற்தொழில் சம்மேளன உறுப்பினர்கள் இரா ணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளுடனான சந் திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் யாழ். கடல் நீரேரிப்பகுதியில் மேற் கொள்ளப்படும் மரபுசார் தொழில் முறையின் நடைமுறைச்சிக்கல்கள் மற்றும் பாதிப்புகள் குறித்து கலந்துரையாடியதுடன் யாழ். கடல் நீரேரிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறகுவலைத் தொழில், கூடுவலைத்தொழில் இழுவை மடி வலைத் தொழில் டைனமற் பாவித்து மேற்கொள் ளப்படும் தொழில் நடவடிக்கைகள் காரணமாக எமது கடல்வளம் அருகிவருவதாக சுட்டிக்காட்டப் பட்டதுடன் இதனைத்தவிர்ப்பதற்கு இந்தத் தொழில்முறை தொழில்களில் ஈடுபடுவதனை எதிர்வரும் மார்ச்மாதம் முதலாம் திகதியில் இருந்து தடைசெய்வது என்று இணக்கம் காணப்பட்டுள் ளது.

இவ்விடயம் குறித்து ஏற்படும் முன்னேற்றம் குறித்து இடையிடையே கூடி சங்க மட்டத்தில் ஆராயவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்பகுதியூடாகச் செல்லும் வீதி களின் மதகுகளில் இருந்து ஐந்து மீற்றர் தொலை வுவரை வலை பாயவும் தடைவிதிக்கப்பட்டுள் ளது. ஏற்கனவே "ஜெய்கா" நிறுவனத்தினரினால் இவ்வாறான தொழில் முறைகளினால் ஏற்படும் பாதிப்புக்குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# தவறான வாகன பயன்பாடு கண்காணிக்க "டிவைஸ்"

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு அவற்றைப் பயன்படுத்தும்போது கணனி மூலமாக கண்காணிக்கும் "டிவைஸ்" எனும் கருவியைப்பொருத்துவதற்கு யாழ்.மாநகர சபையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாநகரசபை யின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடை பெற்ற மாசிமாதத்திற்கான பொதுக்கூட்டத்தி லேயே இதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. யாழ்.மாநகர ஆணையாளர்பிரணவநாதன் இந்த "டிவைஸ்" கருவியை வாகனமொன்றில் பரீட்சார்த தமாகப் பொருத்தி பார்த்ததன் பின்னர் இதனை சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில், முதன்முறையாக யாழ்.மாநகர சபையிலேயே இந்தக் கருவிவாகனமொன்றில் பொருத்திப்பார்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சபையின் வாகனங்கள் தவறாக பயன்படுத்துவ தனைக் கண்டுபிடித்து விடமுடியும் அத்துடன் பல்வேறு தகவல்களையும் கணனிமூலமாகப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா,25)

# இளைஞர், யுவதிகளுக்கான இலவச தொழிற்பயிற்சி

(யாழ்.நிருபர்)

கிளிநொச்சி ஒத்துழைப்பு மையம் பாடசா லையை விட்டு விலகிய 18-25 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை இலவசமாக வழங்க முன்வந்துள்ளது.

ஆங்கிலம் கணனி, அழகுக்கலை, தையறகலை போன்ற துறைகளில் 6 மாத கால பயிற்சிநெறியை விசேட பயிற்சி பெற்ற அனுபவம்மிக்க ஆசிரியர் களால் நடாத்தப்படவுள்ளது. கற்கைநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்பவர்களுக்கு அரசசார் பான நிறுவனத்தின் ஊடாக சான்றிதழ்கள் வழங்கப படவுள்ளன.

கற்கைநெறிமுடிவில் வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமும் உண்டு கற்கை நெறி யைத் தொடர ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் புதன கிழமைக்கு முன்னதாக இணைப்பாளர், ஒத்து ழைப்பு மையம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)


# புனர்வாழ்வு அமைச்சினால் முல்லை. ஆலயங்களுக்கு நட்டஈடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட இந்து, கிறிஸ் தவ ஆலயங்களுக்கான நஷ்ரஈட்டுத் தொகை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை அமைச்சி னால் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை கல்யாணவேல் முருகன் ஆலயம்செவ்வபுரம் கிறிஸ்தவ ஆலயம் போன்றவற்றில் வைத்து முல்லைமாவட்ட அர சாங்க அதிபர் நா.வேதநாயகம் தலைமையில் நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 05 திருத்தலங்களுக்கும் 05 கிறிஸ்தவ ஆலயங் களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நட்ட ஈட்டுத்தொகை புனர்வாழ்வு வழங்கப்பட்டது.

இதற்கு பிரதம விருந்தினராக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சரின் செயலாளர் விதானகே, புனர்வாழ்வு அதிகார சபையின் ப.யசமரசிங்கா, புனர்வாழ்வு அமைச் சின் ஆலோசகர் சதீஸ்குமார், முல்லைமாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், துணுக்காய் பிரதேச செயலாளர் சி.குணபாலன், கரைதுறை பற்று பிரதேசசெயலாளர் தி.தினேஸ்குமார் ஆகியோர் பிரதம அதிதியாகக் கலந்து சிறப் பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)



காரைநகர் ஈழத்துச் சிதம்பர... சிவன் ஆலயத்துக்கு இலங்கைப் பிரதமர் டி.எம். ஜயரத்தின குடும்பசகிதம் விஜயம் செய்தபோது. (50)

# வாரம் ஒரு காரம்




## சோழியன் குடுமி சும்மா ஆடுமா?..

இதற்கு இருவேறு பொருட்கள் இருப்பினும் சோழியன் சுயலாப உட்கார ணமின்றி தலையசைக்க மாட்டான் எனும் திசை முகத்தில் நோக்கினால் தமிழரின் தற்போதைய சர்வதேச அரசியல் தெளிவாகப் புலப்படும் எமது மக்கள பட்டதுன்பங்களிற்கும் விட்ட கண்ணீர்களிற்கும் ஓர் நிரந்தர அரசியல் தீர் வினை இந்த சர்வதேசமும் இலங்கையரசும் பெற்றுத்தருமாக இருப்பின் தற்போது அரங்கேறும் சர்வதேச நாடகங்கள் தமிழர்க்கு பிரயோசனமானவை என நோக்கமுடியும்.

ஆனால் உண்மை அப்படி அல்ல. அத்தனையும் சுயலாப அரசியல் பின்னணியில் அந்தந்த நாடுகள் அரங்கேற்றும் அபிநயங்களாகும்.

தற்போது இறுக்கமான கட்டம் இலங்கையரசுக்கு உருவாகியுள்ளது. இதன் மூலம் தமிழர்க்கு ஓர் தீர்வு மலரும் என பல செய்தி மாலைகளால் சோடிக்கின்றன குடாநாட்டுப் பத்திரிகைகள். இலங்கையரசுக்கு இறுக்க மான கட்டமென்பது உருவாகலாம். ஆனால் அதன் மூலம் தமிழர்க்கு ஓர் தீர்வு கிடைக்குமென்பது 60வயது மாந்தர்க்குக் கூட அந்த ஊடகங்கள் சொல்லும் அம்புலிமாமாப் பாடமாகும்.

இன்று ஐ.நா. பிரதிநிதிகள் ஊடாக ஒருபுறம் அமெரிக்கா விண்ணாணமிடு கின்றது தேர்தல் வெற்றிக்காக மறுபுறம் இந்தியா விண்ணாணமிடுகின்றது இந்த விண்ணாணங்களுக்குத் தீனி போட இலங்கையரசு காணமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவை நியமித்து கண்கட்டுவித்தை காட்டுகின்றது.

இறுதியில் இலங்கை வாழ் தமிழர்களிற்கு மிஞ்சப்போகின்றது அனைவரி னதும் அனுதாப அறிக்கைகள் மாத்திரமே என்பதை எந்த ஊடகங்களாவது எடுத்தியம்புகின்றனவா என்பது தான் மக்கட்சிந்தனைக்கு எட்டப்பட வேண்டிய விடயம்.

அன்று விடுதலைப்புலிகளைக் கண்டு பயந்த அமெரிக்கா, தனது தெற்கா சியா நாடுகளின் தலையீட்டை (ஆளுகையை) இவர்கள் முறியடித்து விடுவா களோ என எண்ணி இலங்கையரசுக்கு உதவி அவர்களை அழிக்க முனைந்து வெற்றியும் கண்டது.

தற்போது போர்க்குற்றவிசாரணை என்கின்ற பெயரில் இலங்கையில் ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்து இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இராணுவத் தளமொன்றை அமைக்கும் நோக்கில் அதற்கு இலங்கை கடலெல்லையை பயன்படுத்த முயற்சிக்கின்றது அமெரிக்கா. இதற்கு இரக சிய ஆட்சியாளர்களையும் அது தெரிவு செய்து இருக்கின்றது.

இது சாத்தியப்படுமா இல்லையோ என்பது ஒரு புறமிருக்க, இதன் பின்ன ணிதான் போர்க்குற்ற விசாரணையென்ற முதலைக்கண்ணீர் வடிப்பு. போர்க் குற்ற விசாரணையை சீராக நடத்தினால் முதல் குற்றவாளி அமெரிக்கா தான் என்பதும் அந்த ஐ.நா. பிரதிநிதிகளிற்கு தெரியும். இந்த அரசியல் பின்னணிகள் எம்மக்களிற்குப் புரியவில்லை. இதுதான் யதார்த்தம்.

மறுபுறத்தில் தமிழக முதல்வர்களாக இருந்தும் அன்று இலங்கைத் தமிழர்களின் துன்பத்தைத் திரும்பிப் பார்க்காதவர்கள், தேர்தல் என்றவுடன் ஆவேசங்களைக் கட்டியெழுப்புகிறார்கள். தற்போது இருக்கும் களநிலவரத் தில் தேர்தலில் வெற்றி பெற தமிழீழப் பாட்டுப் பாட வேண்டும் என முனைந்து, தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனித்தமிழீழத்துக்கு பொர்து வாக்கெடுப்பை நடாத்தவும் அறிவிப்புகளை விளாசியிருக்கிறார்கள்.

பொறுத்திருந்து பாருங்கள் இந்த வாக்கெடுப்பை நடத்தக் கோரும் ஆட்சி யாளர்கள் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் வந்தால் அதையெல்லாம் குப்பை யில் போட்டுவிட்டு, அடுத்த தேர்தலுக்கு மீண்டும் எடுத்தால் போதும் என்று விட்டு விடுார்கள்.

சாக்கடை அரசியல் சிந்தனைகளே சர்வதேச ரீதியில் அரங்கேறுகின்றன. சுயலாபங்களை கருத்திற்கொண்டு ஓர் சமூகத்தின் சுதந்திர வாழ்வும் சுபீட்ச வாய்ப்புகளும் சுட்டெரிக்கப்படுகின்றன.

தெற்காசியப் பிராந்தியத்தில் தனது ஆளுகை வந்ததுடன் அமெரிக்காவுக் குத் தமிழர்கள் பற்றிய பேச்சு தேவையிருக்காது. தேர்தலில் வெற்றிபெற்றவுடன் தமிழ்நாட்டரசு தன் தாளத்தை மாற்றும்.

இத்தனை நெருக்குவாரங்களில் இருந்து விடுபட்ட பின்பு இலங்கையரசு சர்வதேச பிரசாரங்களிற்கு காரணமாக இருந்தவர்கள் என்கின்ற பெயரில் தமிழர்களை மீண்டும் தண்டிக்கும். இந்த விளைவுகள்தான் இனிவரும் காலங் களில் அரங்கேறும் இருந்து பாருங்கள். –வெண்கட்டியன்

# கைவினைக் கலைஞர்களின் நலன்கள் பேணப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(கொழும்பு)

எமது நாட்டில் நாடளாவிய ரீதியில் பாரம்பரிய கைவினைக் கைப்பணியாளர்களை கௌரவிக்கும் முகமாக, இன்றைய தினம் இந்த விருது வழங்கும் வைபவத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும், தேசிய அருங்கலைகள் பேரவையும் இணைந்து நடாத்துவதும், இந்த வைபவத்தில் எமது ஜனாதிபதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய அருங்கலைகள் விருது விழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம். எமது நாட்டின் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பினை வழங்கும் மகிந்த சிந்தனை தூரநோக்கின் பொருளாதார மேம்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில் கிராமிய கைவினை கைப்பணித்துறையை ஊக்குவிப்பதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் அதனைப் பாதுகாப்பதற்கும், அதனூடாக கைவினை கைப்பணியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் எனது அமைச்சு பல்வேறு திட்டங்களை வகுத்து, நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கடந்தகால அழிவு யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்டிருந்த பல்வேறு பாதிப்புக்கள் காரணமாக எமது கைவினை கைப்பணித்துறையும் பாதிப்புகளுக்கும், இடையூறுகளுக்கும் முகம் கொடுத்திருந்தது. ஆனால். இன்று அந்த நிலை இல்லை. இவ்வாறான தொருநிலையில் கைவினை கைப்பணியாளர்களின் உற்பத்தித்துறை மற்றும் சந்தைப்படுத்தல் துறைசார்ந்த பல்வேறு வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதே எனது அமைச்சின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது என்றார்.

## அரசரட்ணம் மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடம் திறந்து வைப்பு





முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரட்ணம் மகா வித்தியாலயத்தில் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் 8.5 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட 6 வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத் தொகுதி கடந்த புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த கட்டடத்தொகுதியினை யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் பிராந்திய அலுவலக திட்டமிடல் அதிகாரி திருமதி. விக்டோரியா தலிஸ்கனொவா திறந்து வைத்தார்.

அத்துடன், பாடசாலையின் தேவைக்கென 2 இலட்சம் ரூபா பெறுமதியான மின்பிறப்பாக்கியொன்றும் இந்நிகழ்வில் வைத்து பாடசாலை அதிபரிடம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இணைந்த பொருளாதார கூட்டுறவு

(கொழும்பு)

இலங்கை ஈராக் நாடுகளின் இணைந்த பொருளாதார கூட்டுறவுக் குழு தமது நடவடிக்கைகளை கடந்த புதன்கிழமை பாக்தாத்தில் ஆரம்பித்துள்ளதாக வணிகத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேயிலையில் மட்டும் அல்லாமல் ஏனைய இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பல பொருட்களின் முக்கிய சந்தை வாய்ப்பு நாடாக ஈராக் திகழ்வதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை பாக்தாத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வெளியிட்டுள்ளார். இலங்கையிலிருந்து சென்ற பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவுக்கு அவர் தலைமை தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாம்புபோன்று திரண்ட உயிரினங்கள் துண்டு துண்டாக உடைந்து கரைந்தன

### கிண்ணியாவில் அதிசயம்

கிண்ணியாவின் அரை ஏக்கர பிரதேசத்திலுள்ள வாவியொன்றிலிருந்து திடீரென அதிகளவில் திரண்டுவந்த பாம்பு போன்ற அரியவகையான உயிரினங்கள் தற்போது துண்டு துண்டாக உடைந்து கரைந்து போயுள்ளதாக புவியியல் பாடத்தில் சிறப்புப் பட்டம் மற்றும் முதுமாணிப் பட்டம் பெற்ற கிண்ணியா வலயக் கல்வி அலுவலக ஆசிரிய வள நிலைய முகாமையாளர் ஏ.டபிள்யூ.முஜீப் தெரிவித்துள்ளார்.

இவை பாம்புகள் அல்ல. ஒரு வகையான அரிய உயிரினங்களாகும். நீருள்ள நிலத்தில் வாழும் இந்த உயிரினங்களால் நீரில்லா நிலத்தில் வாழமுடியாது. நீரில்லா நிலத்திற்கு வந்தால் இந்த உயிரினங்கள் கரைந்துவிடும் இந்நிலையில், வெளியில் வந்த இந்த உயிரினங்கள் தற்போது கரைந்து போயுள்ளன

மாரி காலத்தில் மாத்திரம் கடலுடன் கலக்கும் வாவிகளானது, ஏனைய காலங்களில் நிரந்தரமாக கடலிலிருந்து பிரிந்திருக்கும். சவர் நீரையும் உவர் நீரையும் கொண்ட இவ்வாறான வாவிகளில் இவ்வாறான உயிரினங்கள் வெளியில் வருவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

நீர் நிலைகளில் வெப்ப நிலை அதிகரிக்கின்றபோது, இவ்வாறான வாவிகளிலிருந்து இவ்வாறான உயிரினங்கள் வெளிவருகின்றன என்றார்.

இதேவேளை, இவ்வாறு அரியவகையான மேற்படி உயிரினங்கள் திரண்டு வந்ததால், இயற்கை அனர்த்தம் நிகழ்வதற்கு அறிகுறியாக இருக்கலாமென்று பிரதேசவாசிகள் அஞ்சுகின்றனர்.

கடந்த சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் கிண்ணியாவின் கட்டையாறு பிரதேச ஆற்றில் இவ்வகையான உயிரினங்கள் திரண்டு வந்ததை பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதேகாலப் பகுதியில் மட்டக்களப்பு, செங்கலடி பாலத்திலும் இவ்வகை உயிரினங்கள் திரண்டிருந்தன.

மேலும், 2011ஆம் 2012ஆம் ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் பெரு வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னரும் கிண்ணியாவின் கட்டையாறு ஆற்றில் இவ்வகை உயிரினங்கள் வந்ததை பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.இது மீன் இனத்தைச் சார்ந்தவை அல்ல. இது ஒரு வகையான புழு ஆகுமென மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## 25 மில்லியன் ரூபா செலவில் மூப்பன் குளம் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிராட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள மூப்பன்குளம் 25 மில்லியன் ரூபா செலவில் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மஹாலிங்கம் தயாநந்தன் தெரிவித்தார்.

மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமலுள்ளதால் இங்குள்ள விவசாயக் குடும்பங்கள் சிரமங்களை எதிர்நோக்கு கின்றன. இது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கவனத்திற்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கொண்டுவந்த நிலையில், இக்குள புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரச்சினைகளை முடிவுறுத்த உள்நாட்டு ரீதியான தீர்வே சிறந்தது

### அஸ்கிரிய பீடாதிபதி நம்பிக்கை

உள்நாட்டு பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுகளை முன்வைக்க வேண்டுமென கண்டி அஸ் கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் கட்சித் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போது அவர் இதனைக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் சகல திட்டங்களையும் எதிர்ப்பது எதிர்க் கட்சியின் பணியல்ல. வெளிநாடடைப் பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நாட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

நாம் வாழ்வதற்கு வேறு நாடுகள கிடையாது. எனவே இநத நாட்டை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியமானது. ஆளும் கட்சியின் குற்றங்களை சர்வதேச சமூகத்திடம் முறையிட்டால், அதனை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு இலங்கை மீது தலையீடுகளை செய்ய முயற்சிப்பார்கள் என உடுகம புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

## பேராதனை மாணவர்கள் 33 பேருக்கு வகுப்புத் தடை

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் 33 பேருக்கு காலவரையறையற்ற வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை விவகாரம் தொடர்பில் இவ்வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக ஒழுக்காற்றுகுழுத் தலைவர் கலாநிதி அசோக தங்கல்ல தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் கால்நடை வைத்திய பிரிவு இரண்டாம் வருட மாணவர்கள் 25 பேருக்கும் மூன்றாம் வருட மாணவர்கள் 08 பேருக்கும் இவ்வாறு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் பல்கலைக்கழகத்திற்குள் மாணவர் அழிப்பு நடவடிக்கையை நிர்வாகம் மேற்கொண்டு வருவதாக பேராதனை பல்கலைக்கழக மாணவர ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. அதனை வன்மையாக கண்டிப்பதாக மாணவர் ஒன்றியத் தலைவர் திமுது குணசேகர குறிப்பிட்டார்.

## பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்.கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு போல் பாடசாலை அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்றது

புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது. தலைவராக உ.ரகுபதி, உபதலைவராக தி.சுபாகரன், செயலாளராக சி.உதயகுமார், உப செயலாளராக கி.வெள்ளிமலை பொருளாளராக த.பிரதீபன் நிர்வாக சபை உறுப்பினர்கள் வீ.வீரகுமார், ந.மனோரஞ்சன் உ.வினோத்; தி.ராதிக்போசகர் ச.செல்வானந்தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (90)

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட விஷேட செயற்றிட்டம்

### அடைப்பினுள் தரப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக

1) இரத்தினக் கற்களின் நிறை .................. எனப்படும் அலகினால் அளவிடப்படுகிறது. ஒரு ...................... சமன் .................. கிராம்களாகும்.

2) .................. தன்மைகளைக் களிமண் கொண்டமையால் அது சிறப்புப் பெறுகின்றது.

3) மணலில் அடங்கியுள்ள பிரதான கூறு ...................... ஆகும்.

4) கனியங்கள் .................. பாறைகள் ...........................

5) பாறைகள் .................. அழிவதால் மண் உண்டாகின்றது.

6). எமது நாட்டிலுள்ள எப்பாவெலப் பிரதேசத்தில் பாரிய ............... படிவொன்று உள்ளது.

7) புவியில் உள்ள வளங்கள் ................................ பயன்படுத்துதல் முக்கியமானதாகும்.

8) றப்பர் பாற்கலன்கள் ............................ பகுதியாகும்.

9) பண்படுத்தாத எண்ணெய் ......................... எனப் பெயர் பெறும்.

10) றப்பரிற்கு ...................... சேர்ப்பதால் அது திரையாது பாதுகாக்கப்படுகின்றது.

( உரியம், பெற்றோலியம், சிக்கனமாக 1/S, சிலிக்கா, அப்பற்றைற்று, கரட், நெகிழும் தன்மை, உயர் வெப்பநிலைக்கு சூடாக்கிக் குளிர்ந்த கடினமாக மாறல், திரட்சி நிரோதிகள், ஏகவினமானவை, பல்லின மானவை)

**அட்டவணையை நிரப்புக**

| பதார்த்தத்தின் பெயர் | பயன்கள் (மூன்று) | இலங்கையில் காணப்படும் இடங்கள் (இரண்டு) |
|---|---|---|
| கனிய எண்ணெய் | ........................ | ........................ |
| களிமண் | ........................ | ........................ |
| இரும்புத்தாது | ........................ | ........................ |
| தொலமைற்று | ........................ | ........................ |
| அப்பற்றைற்று | ........................ | ........................ |
| கண்ணாடிமணல் | ........................ | ........................ |
| இரத்தினக்கற்கள் | ........................ | ........................ |
| சுண்ணாம்புக்கற்கள் | ........................ | ........................ |

**அ) பின்வரும் கைத்தொழில்களில் மூலப்பொருளில் இருந்து முடிவுப்பொருள் தயாரிக்கும் முறையை குற்றிவரிப்படம் மூலம் காட்டுக.**

1) கண்ணாடி மணல் ⟶ கண்ணாடி
2) களிமண் ⟶ பீங்கான்
3) இரும்புத்தாது ⟶ இரும்பு
4) சுண்ணக்கல் ⟶ நீறிய சுண்ணாம்பு

**ஆ) ஒவ்வொரு முடிவுப்பொருளும் கொண்டுள்ள சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.**

1) கண்ணாடி →
2) பீங்கான் →
3) இரும்பு →
4) நீறிய சுண்ணாம்பு →

**இ) இவை ஒவ்வொன்றும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.**

1) கண்ணாடி
2) பீங்கான்
3) இரும்பு
4) நீறிய சுண்ணாம்பு

### கீறிட்ட இடங்களை நிரப்புக

1) பாறைகள் சிதைவடையும் இருமுறைகள் உண்டு.
முறை A    முறை B

2) முறை A இல் பங்குபற்றும் காரணிகள் ................................ போன்றன.

3) முறை B இல் பங்குபற்றும் காரணிகள் ........................ போன்றன.

4) ........................... கனிப்பொருள் பாறை சிதைவடைவதால் மணலும் ................ கனிப்பொருள் பாறை சிதைவடைவதால் களிமண்ணும் உண்டாகின்றன.

### கீறிட்ட இடங்களை நிரப்புக

1) றப்பர் மரத்தின் தாவரவியற் பெயர் ..........................

2) றப்பரால் ஆக்கப்பட்ட சில பொருட்களாவன .................. , .................. , ................., ..................., ...................., .................. , ................., ..................., ....................,

3) றப்பரில் காணப்படும் இயல்புகள்
(அ) ..................(ஆ) ........................... (இ)...................... (ஈ)......................
(உ)......................

4) ........................ தாவரப்பகுதியே வாற்கலனாக மாறுகின்றது.

5) றப்பர் பாலிலுள்ள றப்பரின் அளவைத் தீர்மானிப்பதற்கு பயன்படும் உபகரணம் ........................... ஆகும்.

6) DRC எனப்படுவது :................................. ஆகும்.

7) றப்பர் பால் திரட்சியடைவதைத் தடுக்கும் பதார்த்தங்கள் ........................ என அழைக்கப்படுகின்றன.

8) திரட்சியைத் தடுக்கும் பதார்த்தங்கள் சேர்க்கப்படும் சந்தர்ப்பங்கள்
(அ) ........................ (ஆ) ............................ (இ)..........................

9) றப்பரைப் பதப்படுத்தும் முறைகள்
(அ) ...................... (ஆ) ............................ (இ)..........................

### சுருக்கமான விடை தருக

1) சீட்றப்பரிற்கு புகையூட்டும் போது நடைபெறும் 3 தொழிற்பாடுகள் எவை?

2) கிறேப்றப்பர் உற்பத்தியின்போது வெளிற்றியாகப் பயன்படுத்தும் பதார்த்தம் எது?

3) றப்பரில் காணப்படும் மாற்றப்பட வேண்டிய இயல்புகள் எவை?

4) வல்கனைசுப்படுத்தல் என்றால் என்ன?

5) வல்கனைசுப்படுத்தும் முறையைக் கண்டு பிடித்தவர் யார்?

6) வல்கனைசுப்படுத்திய றப்பரின் பண்புகள் எவை?

7) றப்பரைக் கரைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கரைப்பான்கள் சில தருக.

### கீறிட்ட இடங்களை நிரப்புக

1) ஏதாவதோர் பதார்த்தம் வளியில் தகனமடைந்து நீரைத் தருமாயின் அப்பதார்த்தத்தில் ......................... மூலகம் அடங்கியிருக்கும்.

2) கடதாசியிலே ................... , ................ ஆகிய மூலகங்கள் உள்ளன.

3) மெதேன் வாயுவின் சூத்திரம் .............................. ஆகும்.

4) .................... ஆம் ஆண்டில் பெற்றோலியம் ........................ இல் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

5) பண்படுத்தாத எண்ணெயில் உள்ள கூறுகளை வேறுபிரிக்க ............... முறை பயன்படுகிறது.

6) பண்படுத்தாத எண்ணெய்யிலிருந்து வேறுபடுத்தக்கூடிய கூறுகள் ..............., ........................, ..............................

7) பருத்தி, பட்டு போன்ற இயற்கைப் பதார்த்தங்களிற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் செயற்கைப் பிரதியீட்டுப் பதார்த்தம் ...................... , .............................. போன்றனவாகும்.

8) பண்படுத்தாத எண்ணெய் இலங்கையில் ....................... இடத்தில் சுத்திகரிக்கப்படுகின்றது.

9) சேர்வை ஒன்றின் காபன் அணு எண்ணிக்கை அதிகரிக்க ...................... யும் . ........................... யும் அதிகரிக்கின்றது.

10) மின் உபகரணக் காவலியாக ..............., ...................... பயன்படுகின்றது.

### அட்டவணைகளை நிரப்புக

| பிரதியீட்டுப் பொருள் | பயன்படும் சந்தர்ப்பம் |
|---|---|
| 1) பேக்லையிற்று | ............................ |
| 2) நைலோன் | ............................ |
| 3) ......................... | உடையக்கூடிய உபகரணங்களை பாதுகாப்பாக பொதி செய்ய. |
| 4) ......................... | ஒட்டும் இயல்பற்ற பாத்திரம் செய்ய |
| 5) ......................... | ஆடைகள் செய்ய |

பின்வரும் பொருட்கள் கொண்டுள்ள அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் தருக.

(அ) கடதாசி (ஆ) கண்ணாடி
(இ) பருத்தித்துணி (இ) இரும்பு

**மேலே தரப்பட்ட பொருட்கள் தொடர்பாக அட்டவணையை நிரப்புக**

| பொருட்கள் | பிரதியீட்டுப் பொருட்கள் | பிரதியீட்டுப் பொருட்களின் அனுகூலங்கள் | - பிரதிகூலங்கள் |
|---|---|---|---|
| 1) கடதாசி | .............. | .............. | .............. |
| 2) கண்ணாடி | .............. | .............. | .............. |
| 3) பருத்தித்துணி | .............. | .............. | .............. |
| 4) இரும்பு | .............. | .............. | .............. |

### பாரம்பரிய இயல்புகள்

1) ஒரு பரம்பரையிலிருந்து இன்னோர் பரம்பரைக்கு எடுத்துச் .................. , ............................... எடுத்துச் ................................ இயல்புகளுமுண்டு. இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் இயல்புகள் ......................... இயல்புகளாகும்.

2) மனிதனில் ...... ............, ......................., ............................ என்னும் இயல்புகள் பாரம்பரியமானவை.

3) ..............................., ....................., ........................., ............................. போன்ற .................... காரணிகள் இயல்புகள் மாற்றமடைய உதவுகின்றன.

4) வெண்மை நிறமான தோல், மயிர், புருவம் கொண்டவர்களும் எம்மிடையே உண்டு. இதன் காரணம் ..............................., ............................. இது .............. எனப்படும்.

5) பரம்பரை இயல்புகளை ஊடுகடத்தும் காரணிகள் ...................... கலன்களில் அமைந்துள்ளன.

6) பரம்பரையியல்புகள் ஊடுகடத்தல் பற்றிய ஆய்வினை மேற்கொண்டவர் ............................... எனும் பாதிரியாவர்.

7) இவர் தனது ஆய்விற்காக பட்டாணித் தாவரத்தை தேர்ந்தெடுத்தமைக்கான காரணங்களில் சில.
1) ...................................................................
2) ...................................................................
3) ...................................................................
4) ...................................................................

8) சில இயல்புகள் பல ........................... வேறுபடாமல் நிலவுமாயின் அது ............................. இயல்புகளெனப்படும்.

9) ...................... போது வெளிக்காட்டப்படும் இயல்பு .................... இயல்பாகும்.

10) .................. காணப்படும் இயல்பு ............................. இயல்பாகும்.

11) ஒன்றுக்கொன்று ........................ இயல்புகள் ........................ எனப்படும்.

12) தூய எதிரிடை இயல்புகளைக் கொண்ட தாவரங்களை ......................... மூலம் ..................................... செய்து கிடைத்த தாவரங்கள் அனைத்தும் ஆட்சியான இயல்பு கொண்டவையாயிருந்தன.

13) ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு ...................... எடுத்துச் செல்லும் காரணிகள் ............................ எனப்படும்.

14) ஒரு அங்கியில் ஒரு சோடி எதிரான இயல்புகள் மாத்திரம் .............. கொள்ளல் ........................... எனப்படும்.

15) பெற்றோர் இருவரிடமிருந்தும் ஒரேயியல்பிற்குரிய பரம்பரையலகுகள் சந்ததிகளுக்குக் கிடைத்தல் ......................... எனப்படும்.

16) எதிரான இயல்புகள் உள்ள சீன்கள் அமையும்போது .............. எனப்படும்.

17) ஒரு சோடி எதிரிடையான இயல்புகள் ......................... ஆட்சியற்று இருத்தல் ........................... எனப்படும்.

18) இதன் காரணமாகப் பெற்றோர்களை விட ................. இயல்புகளை உடைய ............................... உருவாகும்.

19) இச்சந்தர்ப்பத்திற்கு உதாரணமாக

தூயவழி சிவப்புப் பூத்தாவரம் — தூயவழி வெள்ளைப் பூத்தாவரம்

$F_1$ சந்ததி (RR) X (rr)

______________
(——)

______________ X ______________
(——) (——)

### இயற்கைத் தேர்வுக்கொள்கை

1) இயற்கைத் தேர்வுக் கொள்கைக்கான பாய்ச்சல் கோட்டு வரைபடம்

மிகைக் குடித்தொகை
↓
______________
↓
______________
↓
______________
↓
______________
↓
______________

2) .................. தன்மைக்கேற்ப ............... இயல்புகள், தேர்ந்தெடுக்கப்படுவதால் இது ........................ எனப்படும்.

3) கூர்ப்பு நிகழ்ந்தமைக்கான சான்றுகளில் இரண்டு
1) ............................
2) ............................

4) ........................ என்பது ஏதாவதொரு முறையில் .................. காணப்படும் .................... அல்லது அவை ......................... சான்றுகளாகும்.

5) தற்போது ...................... அழிந்துபோன அங்கிகளின் ...................... களிலிருந்து சூழலுக்கு ............................. இயல்பு கொண்டவை.

6) ...................... உடலமைப்பியல் மூலம் பெற்ற சான்றுகளுக்கு உதாரணமாக ...................... அங்கிகளின் ............................ அமைப்பைக் கூறலாம்.

7) அநேக ............... முன்னவயங்கள் பல அம்சங்களில் .................. இவை ஒரே ......................... தோன்றியிருப்பது தெளிவாகின்றது.

8) சுவட்டுச் சான்றுகளையும் வேறு .......................... வைத்து அங்கிகளில் ...................... நடைபெற்றிருப்பதை விளக்கும் அமைப்பு .................... ஆகும்.

9) மாறுதலுக்குள்ளாகும் ................ ஏற்ப அங்கிகள் ................. கொண்டிருத்தல் வேண்டும்.

10) அங்கிகளின் ....................... நிலவுகைக்கு ...................... அவசியமாகும்.

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை வெளியான புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்களின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 1 | 31) 3 |
| 2) 2 | 12) 3 | 22) 1 | 32) 1 |
| 3) 1 | 13) 2 | 23) 1 | 33) 2 |
| 4) 2 | 14) 3 | 24) 2 | 34) 1 |
| 5) 1 | 15) 3 | 25) 15 | 35) கல்லின் மேல் எழுத்துப்போல |
| 6) 2 | 16) 3 | 26) 2 | 36) 4 |
| 7) 3 | 17) 7 | 27) 1 | 37) 1 |
| 8) 2 | 18) 3 | 28) அமைதி , குருதி | 38) 1 |
| 9) 1 | 19) 1 | 29) அழகு, திகதி | 39) No |
| 10) 3 | 20) 2 | 30) 3 | 40) No |

## பகுதி II

01) ஓர் இளம் பெண்ணை
02) செந்தாமரை மலர்கின்றன
03) பூக்கள் மலர்தல் / பூத்தல்/ விரிதல்
04) ஒரு வகைப் பூ
05) செங்கதிர் பொங்கி வருதல் செந்தாமரை மலர்தல்.
06) முல்லை அரும்பு விரிதல் / மொட்டுக்கள் பூவாக மலர்தல்.
07) கூம்புதல் / வாடுதல் / சுருங்குதல்
08) நல்ல / வெள்ளி
09) விரிவது +. உண்டு.
10) கடிகாரம்/ செந்தாமரை / மொட்டுக்கள்
11) அ) சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது
ஆ) வறுமையிலும் செம்மையாக வாழ்தல் வேண்டும்.
12) அ) தொழிலாளிஆ) தலையாணை
13) (ை) நேறள ீயிநச
ை) ீடயல பசழரனெ
(ைை) யுசைிழசவ
14) 1. தயவு செய்து இங்கே வாருங்கள்
2. உங்கள் வரவு நல்வரவாகட்டும்
15) 1. பொத 2. பத் 3. தஹய
16) 2
17) 4
18) 1
19) 3
20) 2
21) 1
22) 1
23) 4
24) 2
25) 1
26) 3
27) 1
28) 3
29) 1
30) 2
31) 4
32) 1
33) 1
34) 2
35) 1
36) 1
37) 4
38) 5
39) 1
40) 4
41) 2
42) 3
43) i. ஒளிராது ii. ஒளிராது
iii. ஒளிரும்
44) $\frac{6}{8} / \frac{3}{4}$
45) i. வியாழன்
ii. 80டு
iii.15டு
iv.540.ீ.ஶ்ரீ
v. 5
vi. திங்கள் - 45, செவ்வாய் - 30 புதன் - 25, வியாழன் - 55, வெள்ளி - 15
47) 393 ml
48) 22 cm
49) 72 cm
50) 7
51) $\frac{1}{8}$
52) 210/=
53) 36cm

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டாடு வழங்கப்பட வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

1983 இலிருந்து இறுதி யுத்தம் வரை பாதிக்கப்பட்டு அழிவுகளை சந்தித்த மக்களுக்கு உரிய நஷ்டஈடுகளை வழங்கவும், நட்ட ஈட்டுக்காக விண்ணப்பித்து நீண்ட நாட்களாகக் காத்திருக்கும் மக்களுக்கு அதனை விரைவாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளையும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்


யுத்தத்தினால் இழப்புகளை சந்தித்த மக்கள் நஷ்ட ஈட்டுக்காக விண்ணப்பித்து நீண்ட நாட்களாக காத்திருக்கிறார்கள். இவர்களுக்கான நஷ்டஈடுகளை விரைவாக வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சும், அதன் அதிகாரிகளும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

புனர்வாழ்வு அதிகார சபை 1991 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை யுத்தத்தாலும், கலவரங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடுகளை வழங்கி வருகிறது. தற்போது இந்த நாட்டிலே யுத்தம் முடிந்து நாடு இயல்பு நிலைமைக்குத் திரும்பிய பின்னர் புனர்வாழ்வு மற்றும சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு என்ற ஒரு அமைச்சை உருவாக்கி அதற்கூடாகப் பெருந்தொயையான நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்து மக்களுக்கான பல வேலைத்திட்டங்களை முனனெடுத்து வருகிறது.

2013 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் மட்டும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை இழந்த அல்லது சொத்துக்களை இழந்த 600 பேருக்கு நஸ்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளது அதன் ஒரு கட்டமாக 265 பயனாளிகளுக்கு கிட்டத்தட்ட 200 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படுகிறது. முல்லைத்தீவிலும் 200 பயனாளிகளுக்கு 250 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட செயலகத்தின் புள்ளிவிபரத்தின் அடிப்படையில் வீடுகள் சேதமடைந்த 1300 விண்ணப்பங்கள் முறையாக பரிசீலிக்கப்பட்டு புனர்வாழ்வு அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதைவிட மோசமாக பாதிக்கப்பட்டவர்களின் 1000 விண்ணப்பங்கள் மேலும் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# மெழுகுதிரி உற்பத்தி அச்சுக்கள் அன்பளிப்பு



கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவளநிலைய அங்கத்தவர்களின் உற்பத்தித்திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் Barath State Bank Of India - யாழ்ப்பாணக் கிளையால் மெழுகுதிரி உற்பத்திக்கான அச்சுக்கள் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டன.

முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் Barath State Bank Of India இன் முகாமையாளர் வேலாயுதம் சிவபாலன் கலந்து கொண்டு அச்சுக்களை வழங்கி வைத்தார் கருவி சமூக வள நிலையத்தின் தலைவர் க.தர்மசேகரம் அச்சினைப் பெற்றுக் கொண்டார்.

# மீனாட்சி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம்

ஈவினை-மதுரையம்பதி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சியம்பாள் திருக்கோயில் வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 19 ஆம் திகதி புதன்கிழமையுடன் நிறைவடையவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு இரதோற்சவம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பங்குனி உத்தர தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் மாலை 5 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவ காலத்தில் தினமும மாலை 5.30 மணிமுதல் இரவு 8 மணி வரை விசேட பூஜைகள் இடம்பெறும். இவ்வுற்சவம் ஆலயப் பிரதம குரு தேசமான்ய து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ)

# இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலைக்கான இளைஞர்கழக புனரமைப்பு பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது, பாடசாலை ஆசிரியை திருமதி சிவானந்தராஜா, சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளனத்தலைவர் திரு ந.செந்தில்குமரன், மற்றும் ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தலைவர் எப்.எக்ஸ்.டி. கூரே ஆகியோர் கலந்து கொண்டனர்.

60 மாணவர்கள் இணைந்து கொண்டு புதிய நிர்வாகம் ஒன்றை அமைத்தனர். தலைவராக செல்வன் டனித்தன், செயலாளராக செல்வி சுகன்யா, பொருளாளராக அபிவர்னா, அமைப்பாளராக சுகன்யா உப தலைவராக செல்வன் டிலக்சன் இவர்களோடு உப செயலாளராக செல்வன் திருவரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (114)

# அண்ணை றைற்

# காலமானார்



"அண்ணை றைற்" புகழ் கே. எஸ். பாலச்சந்திரன் காலமானார்:-

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன் என்ற கே.எஸ்.பாலச்சந்திரன் கடந்த 26 ஆம் திகதி கனடாவில் சுகவீனம் காரணமாக காலமானார். 10 யூலை 1944 கரவெட்டியில் பிறந்து இணுவிலில் புகுந்தது பின் புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து வந்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைகளத்தில் வரி உத்தியோகத்தராக பணி புரிந்த இவர் ஈழத்தின் நாடக, திரைப்படக் கலைஞர், எழுத்தாளர், இலங்கை வானொலி நடிகர்களில் பெயர் சொல்லக்கூடிய கே.எஸ். புாலச்சந்திரன் ஏறத்தாள 20 ஆண்டுளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும், வர்த்தக சேவையிலும் ஒலிபரப்பான ஏராளமான வானொலி நாடகங்களில் நடித்திருந்தார். தணியாத தாகம் என்ற பலரும் அறிந்த வானொலி தொடர் நாடகத்தில் சோமு என்ற பாத்திரத்தில் நடித்தவர். இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நாடகங்களான நிஜங்களின் தரிசனம், உதயத்தில் அஸ்தமனம், திருப்பங்கள் பேர்ன்றவற்றில் நடித்ததோடு காதம்பரி நிகழ்ச்சியில் பல குறு நாடகங்களை எழுதி நடித்திருக்கிறார்.

1965இல் நெல்லை க. பேரன் எழுதி, நெல்லியடி ஐக்கிய கலாசாலையில் மேடையேறிய "புரோக்கர் பொன்னம் பலம்" என்ற நகைச்சுவை நாடகத்தில் நடிக்கத் தொடங்கி 1990இல் கொழும்பில் வெள்ளி விழா கொண்டாடியவர். இதிகாசம், சமுக, நவீன, நகைச்சுவை, பாநாடகம் என அனைத்து வகையான மேடை நாடகங்களிலும் நடித்தவர். இலங்கையில் வாடைக்காற்று, அவள் ஒரு ஜீவநதி, நாடு போற்ற வாழ்க, 'சார்மிளா வின் இதய ராகம், Blendings (ஆங்கிலம்) அஞ்சானா (சிங்களம்) ஆகிய திரைப் படங்களிலும், கனடாவில் உயிரே உயிரே, தமிழிச்சி, கனவுகள் மென்மையான வைரங்கள், சகா,என் கண் முன்னாலே, 1999 ஆகிய திரைப்படங்களிலும் நடித்தவர்.

இலங்கை வானொலிக்காக ஏராளமான நகைச்சுவை நாடகங்களையும், தனி நாடகங்களையும், தொடர் நாடகங்களையும் எழுதியவர். தொடர் நாடகங்களில் கிராமத்துக் கனவுகள் இவரது பிறந்த இடமான கரவெட்டியை பின்னணியாக கொண்டிருப்பதும், வாத்தியார் வீட்டில் இவர் வாழ்ந்த இடமான இணுவிலை பின்னணியாகக் கொண்டிருப்பதும் தனிச்சிறப்பாகும்.

"மனமே மனமே" என்ற தொடர் நாடகத்தை எழுதி, இயக்கி தயாரித்து வழங்கியிருக்கிறார். கனவுகளும் தீவுகளும், தலைமுறைகள், குரங்கு கைத் தலையணைப் பஞ்சுகளாய், காரோட்டம், கலாட்டாக்காரர்கள் முதலான 20இற்கு மேற்பட்ட மேடை நாடகங்களை எழுதி, இயக்கி, மேடையேற்றியுள்ளார்.

தினகரன், வீரகேசரி முதலான பத்திரிகைகளில் "மலர் மணாளன்" என்ற புனைபெயரில் சிறுகதைகள் எழுதியதோடு, சிரித்திரன் இதழில் பல "சிறுகதை" களை எழுதியுள்ளார். தினகரன், ஈழநாடு, முரசொலி போன்ற பத்திரிகைகளில் திரைப்படம், விளையாட்டுத் துறை தொடர்பான பல கட்டுரைகளையும் எழுதினார். ஐரோப்பாவில் வெளிவரும் "ஒரு பேப்பர்" என்ற பத்திரிகையில் "கடந்தது. நடந்தது" எனும் நகைச்சுவை கட்டுரைத் தொட ரையும், கனடாவில் "தாய் வீடு" பத்திரிகையில் வாழ்வியல் சம்பந்தமான கட்டுரைத் தொடரையும், "தமிழ் ரைம்" சஞ்சிகையில் "என் கலைவாழ்வில்" என்ற அனுபவத்தொடரையும் எழுதியவர். அண்மையில் தாய்வீடு பத்திரிகையில் , "வாத்தியார் வீட்டிலிருந்து வான்கூவர் வரை" என்ற தொடரையும், "தூறல்" என்ற காலாண்டு சஞ்சிகையில் "என் மனவானில்" என்ற தொடரையும் எழுதி வந்தார்.

இலங்கை வானொலியில், "கலைக் கோலம்" சஞ்சிகை நிகழ்ச்சியையும், "விவேகச் சக்கரம்" என்ற பொதுஅறிவுப் போட்டி நிகழ்ச்சியையும் தயாரித்து வழங்கியிருக்கிறார்.

1973இல் இலங்கை வானொலி நிலையத்தில் இரசிகர்கள் முன் ஒலிப்பதிவாகி, 1974இல் யாழ்ப்பாணத்தில் தமி



ழாராய்ச்சி மாநாட்டில் அரங்கேறி, 33 ஆண்டுகளாக உலகின் பல நகரங்களில் மேடையேறிய "அண்ணை றைற்" இவரது புகழ்பெற்ற தனிநடிப்பு நிகழ்ச்சியாகும்.

அண்ணை றைற், ஓடலி இராசையா, தியேட்டரில் உள்ளிட்ட தனி நடிப்பு நிகழ்ச்சிகள் இறுவட்டாக வெளிவந்துள்ளன. இவர் கரையைத் தேடும் கட்டுமரங்கள் (நூல்), (புதினம், 2009, வடலி வெளியீடு), நேற்றுப் போல இருக்கிறது, (கட்டுரைத் தொகுப்பு, 2011,கனகா பதிப்பக வெளியீடு) ஆகிய நூல்களை வெளியிட்டார்.

கே.எஸ்.பாலச்சந்திரன் எழுதிய "கரையைத் தேடும் கட்டுமரங்கள்" என்ற புதின நூலுக்கு 2009ஆம் ஆண்டுக்கான அமுதன் அடிகள் இலக்கிய விருது கிடைத்தது. அவர் எழுதிய "நேற்றுப் போல இருக்கிறது" என்ற கட்டுரைத் தொகுப்பு இலங்கை சாகித்ய விருதுக்காக சிறந்த நூலாக நானாவித பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டது. "நேற்றுப் போல இருக்கிறது" என்ற கட்டுரைத் தொகுப்பு 2011இல் இலங்கை இலக்கியப் பேரவை "யாழ். இலக்கியவட்டம் வழங்கிய சிறந்த நூலுக்கான (நானாவிதப்பிரிவு) விருதையும் பெற்றது.

# தீவிரவாத தாக்குதலில் நைஜீரியாவில் 37பேர் பலி



(கானோ)

நைஜீரியா நாட்டில் அதமாவா மாநிலத்தில் போகோ ஹாரம் தீவிரவாதிகள் 3 குழுக்களாக சென்று திடீர் தாக்குதல் நடாத்தினர். அதில் கல்லூரி, பள்ளிக்கூடம் ஆகியவையும் அடங்கும். இதில் 37 பேர் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நடைபெற்ற இடங்களில் சிதறி கிடக்கும் உடல்களை மீட்டு வருகிறோம் என்றும் எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என்றும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்: போகோ ஹாரம் என்ற தீவிரவாத அமைப்பினர் அங்கு அப்பாவி மக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துகிறார்கள். சமீபத்தில் பள்ளிக்கூடத்தில் புகுந்து 43 பேரைக் கொன்றனர். மேலும், மாணவிகள் 16 பேரை கடத்தி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸில் இணைந்தார் விஜயசாந்தி




(புதுடில்லி)

திரைப்பட நடிகையும், டி.ஆர்.எஸ்.,கட்சியின்எம்.பியுமான விஜய சாந்தி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். தெலுங்கானா மாநிலம உருவான பின் டி.ஆர்.எஸ் கட்சியின் சந்திரசேகராவ் தனது டி.ஆர்.எஸ் கட்சியை காங்கிரசுடன் இணைப்பது குறித்து பேச்சு வார்த்தை நடாத்தி வரும் வேளையில் விஜய சாந்தி காங்கிரசில்இணைந்துள்ளது வரவேற்க தக்கது என மாநில மேலிட பொறுப்பாளர் திக்விஜய் சிங் தெரிவித்துள்ளார். விஜய சாந்தி ஆந்திராவின் மேடக் தொகுதியில் இருந்து டி.ஆர்.எஸ் ., கட்சி சார்பில் எம்.பியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். தற்போதைய லோக்சபாவில் டி.ஆர்.எஸ் கட்சி சார்பில் சந்திரசேகரராவ் மற்றும் விஜயசாந்தி மட்டுமே எம்.பிக்களாகவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரெயின் – ரஷ்யா எல்லையில் எந்த நடவடிக்கையும் வேண்டாம்

## அமெரிக்கா வலியுறுத்து



உக்ரெயின் - ரஷ்யா எல்லையில் உள்ள கிரிமீயா பகுதியில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அமெரிக்கா ரஷ்யாவை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி கூறியுள்ளதாவது:- உக்ரெயின் ரஷ்ய எல்லை கிரீமியா பகுதியில் தற்போது ரஷ்ய படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.இது உக்ரெயினில் மேலும் பதற்ற நிலையை அதிகரித்துள்ளது. எனவே தற்போது வேறு எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டாம் என ரஷ்யாவை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. அதேநேரம் உக்ரெயின் முன்னாள் அதிபர் தற்போது ரஷ்யாவின் பாதுகாப்பிலேயே இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# எப்போது மரணம் நிகழுமென கணிக்கும் இரத்த பரிசோதனை முறை கண்டுபிடிப்பு



(லண்டன்)

அடுத்த 5 ஆண்டுக்குள் மரணம் ஏற்படுமா என்பதை ஆராய்ந்து சொல்லும் நவீன இரத்தப் பரிசோதனை முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பின்லாந்தின் யுலு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றுபவர் மைகா அலா கோர்பெலா. இவர் புது வகையான இரத்தப் பரிசோதனை முறை ஒன்றை கண்டு பிடித்துள்ளார். தன்னுடைய கண்டுபிடிப்பு குறித்து அவர் கூறியதாவது, இரத்தத்தில் உள்ள நுண்ணுயிரிகளின் அடிப்படையில் ஒருவர் ஆபத்தில் உள்ளாரா, இல்லையா என்பது குறித்து கண்டறிய முடியும். அந்த வகையில், பின்லாந்தில் 17,000 பேரின இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சிகிச்சை எடுத்துக் கொள்ளாத நிலையில் இருக்கும் சிறுநீரக நோயாளிகள், இருதய நோயாளிகள் ஆகியோரின் இரத்த மாதிரிகளில், அவர்களின் உடல்நிலை எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது என்பதை இந்த இரத்தப் பரிசோதனை காட்டிக் கொடுத்துவிடும். இதேபோல் பிற நோயால் தாக்கப்பட்டவர்களின் உடல்நிலையையும் இதன் மூலம் அறியலாம். நன்றாக இருப்பவர்களின் இரத்தத்துக்கும், நோயாளிகளின் இரத்தத்துக்கும் பெரிய அளவில வித்தியாசங்கள் உள்ளன. இதை கண்டறியும் நவீன சோதனைக்கு, நியூக்ளியர் மேக்னடிக் ரிசோனன்ஸ் (என்எம்ஆர்) ஸ்பெக்ட்ராஸ்கோபி என்று அழைக்கப்படுகிறது. இதன் மூலம் அடுத்த 5 ஆண்டுக்குள் ஒருவருக்கு இறப்பு ஏற்படுமா என்பதையும் கணிக்க முடியும். இவ்வாறு மைகா அலா கோர்பெலா கூறினார்.

# பழமையான தேவாலயம் ஜேர்மனியில் கண்டுபிடிப்பு



ஜேர்மனியில் மிகப் பழமையான தேவாலயம் ஒன்று தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் மெயின்ஸ் (Mainz) நகரில் கதீட்ரல் தேவாலயம் ஒன்று கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இந்தத் தேவாலயம் சார்லிமாகினி என்ற மன்னர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதுடன், 1000 வருடங்கள் பழமைவாய்ந்தது என தொல்லியல் ஆராச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைத்தொடர்ந்து தேவாலயத்தின் அடித்தளம் முதல் கூரை வரை 7ஆம் நூற்றாண்டில வாழ்ந்த(Carolingian) காரோலிங்கியன் வம்சத்தின் தடயங்கள் அறியப்படுகின்றது என்று ஹெடன்பேர்கின் கலை வரலாறு நிறுவக பேராசிரியர் மத்தியஸ் அன்டர்மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரொனால்ட் கோசிலின் என்ற மற்றொரு தொல்லியல் ஆய்வாளர் கூறுகையில், மெயின்ஸ்(Mainz) நகரில் ரோமானியர்கள் ஆட்சி புரிந்த காலத்திலிருந்தே கிறிஸ்தவர்கள் இருந்திருக்கின்றனர் என்றும், ஆராய்ச்சியின் போது புதைந்திருந்த 2 மனித எலும்பு கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மோசல் நதியோரம் ரோமானியர் காலத்தின் போது கட்டப்பட்டு பழமை வாய்ந்ததில் முதலாம் இடத்தில் வகிக்கும் Trier என்ற கதீட் ரல் தேவாலயத்திற்கு அடுத்தப்படியாக, மெயின்ஸ் நகர கதீட்ரல் தேவாலயமே இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

உலகச் செய்திகள்



ஆபிரிக்க நாடான கொங்கோ நாட்டின் நிலவரம் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜொன்கெர்ரி, வோஷிங்டனில் உயரதிகாரிகளை சந்தித்து ஆலோசனை நடாத்தியபோது

# இந்தியாவில் ராகுலை விட மோடிக்கே அதிக ஆதரவு

## பியூ கருத்துக்கணிப்பு



(வோஷிங்டன்)

நடைபெற உள்ள இந்திய நாடாளுமன்ற தேர்தலில், காங்கிரஸ் துணைத் தலைவர், ராகுலை விட, பா.ஜ., பிரதமர் வேட்பாளர், நரேந்திர மோடிக்கு அதிக ஆதரவு உள்ளதாக, அமெரிக்க நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லோக்சபாவுக்கான தேர்தல், விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. அனைத்து கட்சிகளும், தொகுதி பங்கீட்டுக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. பிரதான கட்சிகள் பிரசாரத்தில் இறங்கிவிட்டன. இந்நிலையில், அமெரிக்காவில் உள்ள, "பியூ" கருத்துக் கணிப்பு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் கூறப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின், பல்வேறு மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில், 63 சதவீதம் பேர், பா.ஜ., கட்சியை ஆதரிப்பதாகவும், 19 சதவீதம் பேர், காங்கிரசுக்கு ஓட்டளிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளனர். கடந்த டிசம்பர், 7 முதல், ஜனவரி, 12 வரை நடாத்தப்பட்ட, இந்த ஆய்வில், 10இல், ஆறு பேர், பா.ஜ.,வுக்கு ஆதரவாக உள்ளனர் 10இல் இருவர், காங்கிரசை ஆதரிக்கின்றனர். குஜராத் கலவரம் உள்ளிட்ட புகார்கள் இருந்தாலும், ராகுலை விட, நரேந்திர மோடிக்கு ஆதரவு அதிகம் உள்ளது. இவ்வாறு, "பியூ" நிறுவன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அவதூறு வழக்கு விவகாரம் கேஜிரிவாலுக்கு அழைப்பாணை



பா.ஜ.க மூத்த தலைவர் நிதின் கட்காரியை ஊழவாதி என டில்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜிரிவால் விமர்சித்துள்ளதோடு இந்தியாவின் பெரிய ஊழல்வாதிகள் பட்டியல் என்று ஒரு பட்டியலை வெளியிட்ட அரவிந்த் கேஜ்ரிவால், நிதின் கட்காரியையும் அதில் இணைத்திருந்தார்.

இதனால் கேஜிரிவால் மீது அவதூறு வழக்கு தொடுத்தார் கட்காரி. இந்த வழக்கில் டில்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு டில்லி உயர்நீதிமன்றம் நேற்று அழைப்பாணை அனுப்பியுள்ளது

# குற்றவாளிகள் மீது வலைவீச்சு; கடந்த வாரம் 179 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த வாரம் பல்வேறு குற்றச்செயல்களின் நிமித்தமும் நீதிமன்ற பிடியாணையின் பிரகாரமும் 179 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருப்பதாக யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற. வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கடந்த வாரம் யாழ். பொலிஸ பிரிவில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற குற்றத்திற்காக 20 பேரும, குடிபோதையில் வாகனம் செலுத்திய 13 பேரும், அடித்துக் காயப்படுத்திய குற்றத்திற்காக 11 பேரும் உட்பட 87 பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பிடியாணையின் பிரகாரம் 21 பேரும், சந்தேகத்தின் பேரில் 15 பேரும், ஏனைய குற்றங்களுக்காக 42 பேர் உட்பட 92 பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு சிறைச்சாலையில் நாளாந்தம் ஹெரோயின் விற்பனை

(கொழும்பு)

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தினமும் சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி போதைப் பொருள் வர்த்தகத்தை முக்கிய போதைப பொருள் வியாபாரிகள் மேற்கொண்டு வருவதுடன் அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் சில சிறை அதிகாரிகள் வழங்கி வருவதாக கூறப்படுகிறது.

இதற்காக அந்த அதிகாரிகளுக்கு மாதாந்தம் தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

அதிகளவான போதைப் பொருள் விற்பனையாளர்கள் மற்றும் போதைப் பொருளை பயன்படுத்தும் நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரே சிறைச்சாலையாக கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை மாறியுள்ளதாக ஏனைய அதிகாரிகள் கூறுகின்றனர்.

பிரதான போதைப் பொருள் விற்பனையாளர்கள் மூன்று '3 ஜீ' செல்போன்களை பயன்படுத்தி வருவதாகவும் போதைப் பொருளை விற்பனை செய்ய அவர்களுக்கு தனியான சிறைக்கூடு வழங்கப்பட்டிருப்பதாக அறியக்கிடைத்துள்ளது.

சிறைச்சாலையில் பௌத்த வழிபாட்டுத் தலம் ஒன்றை நிர்மாணித்து கொடுத்துள்ளதாக கூறப்படும் மற்றுமொரு போதைப் பொருள் விற்பனையாளர், '3 ஜீ' செல்போனை பயன்படுத்தி சிறைச்சாலைக்கு வெளியில் போதைப் பொருள் விற்பனையை மேற்கொண்டு வருவதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# யாழ். நகரில் போதை வர்த்தகம்; சூத்திரதாரிகளை தேடி வேட்டை

யாழ். நகரில் ஐந்து சந்திப் பகுதியில் வைத்து போதைப் பொருள் வைத்திருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் மூவரை யாழ். பொலிஸார் தேடிவருவதாக யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தகவல் தருகையில்,

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் குறித்த தகவல் பெறப்பட்டிருப்பதாகவும், இவர்கள் கைதுசெய்யப்பட்டதனையடுத்து நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவித்த அவர், கைதுசெய்யப்பட்டவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

# மீண்டும் தலையெடுக்கிறது டெங்கு அபாயம்

கடந்த மாதம் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிய 44 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த வருடம் நேற்றுவரை இவ்வாறு பாதிக்கப்பட்ட 129 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அந்த அதிகாரி நேற்றைய தினம் யாழ். மாநகர சுகாதாரப் பிரிவில் நாவாந்துறைப் பகுதியில் இருந்து ஒருவர் இவ்வாறு சிகிச்சைக்கு. அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் வடக்கில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக இடைக்கிடையே பெய்து வரும் மழை காரணமாகவும், வெப்பநிலை காரணமாகவும் இந்தநோய் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (பா)

# துரிதகதியில் இடம்பெறும் வீதி புனரமைப்புப் பணி

(வேலணை)

யாழ். பண்ணை வீதியிலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பிரதான வீதி மிகத் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பழைய பாலங்கள், மதகுகள் உடைக்கப்பட்டு மாற்றுப் பாதையூடாக தற்போது போக்குவரத்து இடம்பெற்று வருகின்றது.

கறுப்பாச்சி அம்மன் கோயிலடி, அல்லைப்பிட்டி சந்தி, மண்டைதீவு சந்தி ஆகிய சந்திகளுக்கு அண்மையில் உள்ள மதகுகளும் பாலங்களுமே இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நவீன முறையில் கனரக வாகனங்களைக் கொண்டு இவ்வீதி அகலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

## அமெரிக்கா அறிக்கை...

பட்டுள்ளது. தொடர்ந்தும் மனித உரிமைகள் குறித்து தெரிவிக்கப்படும் அடிப்படை அற்ற குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

## ஜெனிவாத்...

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா குறிப்பிடுவதனைப் போன்று இலங்கையின் நிலைமைகள் பாரதூரமாக இல்லை என குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 9 மனித...

அங்கு சிகிச்சை பெறச் சென்ற பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதனை அப்பிரதேச மக்கள் நேற்று தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (29)

## ஜெனிவாவில்...

நட்பு நாடுகளுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அரசாங்கம் பதில் தீர்மானத்தை நிறைவேற்றவுள்ளதாக முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், இவ்வாறான எந்த விதமான தீர்மானங்களையும் நிறைவேற்றப் போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற உள்ள நிலையிலேயே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் மறுப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்ற அரசாங்கத்துக்கான பரிந்துரையும் இடம்பெற்றுள்ளது.

ஆனால் இது நியாயமற்ற கோரிக்கை என்று அரசாங்கம் கூறியுள்ளது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களின் அனைத்துலக வலைப்பின்னல், தமது நாடு கடந்த அமைப்புகளின் மூலம், இலங்கையில் அமைதி மற்றும் உறுதிப்பாட்டையும், நல்லிணக்க செயல்முறைகளையும் சீர்குலைக்க தொடர்ந்தும், தீவிரவாத செயற்பாடுகளுக்கு ஆதரவாக இருந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், பயங்கரவாத தடுப்புச் சட்டம் இலங்கைக்குத் தேவைப்படுகிறது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோருவது நியாயமற்றது.

அமெரிக்காவும், பிரித்தானியாவும் இதைவிட இன்னும் வலுவான சட்டங்களைக் கொண்டுள்ளன என்றும் அரசாங்கம் பதிலளித்துள்ளது.

# யுத்தப் பாதிப்பிற்குள்ளான வடக்கிற்கு 60,000 வீடுகள் தேவை

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் 60,000 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 300 மில்லியன் அமெரிக்க டொலரிலும் கூடுதலான நிதி தேவைப்படுவதாக உதவி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

வீடு நிர்மாணிப்பதற்கென புதிய நிதியென எதுவும் வருவதில்லை என இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைவர் ஜகத் அபேசிங்க தெரிவித்துள்ளார். யுத்தம் முடிந்த கையோடு நாம் வீடமைப்புக்களுக்காக நிதியை மும்முரமாக கேட்டுப் பெற்றிருகக வேண்டும். காலம் கடந்து விட்டதாலும் இதைவிட முக்கிய பிரச்சினைகள் உலகின் பல பகுதிகளிலும் ஏற்பட்டமையினாலும் நிதிவளம் அற்றுப் போக காரணமாகின என்று அபேசிங்க கூறினார்.

வட மாகாணத்தில் 138,651 குடும்பங்களில் 32 சதவீதமானோர் மட்டும் தற்காலிக வசிப்பிடங்களில் வாழ்ந்தனர். 6 சதவீனமானோர் உறவினர், நண்பர்களுடன் வாழ்ந்தனர் என 2013 இல் ஐக்கிய நாடுகளுக்கான அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் நடத்திய ஆய்வில் கூறப்பட்டது.'

யுத்தம் முடிந்த பின்னர் 146,000 வீடுகள் தேவைப்பட்டிருந்தன. 41,000 வீடுகள் மீளக்குடியமர்ந்தோருக்கு மட்டும் வழங்கப்பட்டன. 10,500 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என ஐ. நா ஹரிட்டார் கூறினார். 83,000 வீடுகளுக்கு அரசாங்கமும் நன்கொடையாளர்களும் நிதி அளித்துள்ளனர். ஆயினும் இன்னும் 63,000 வீடுகளுக்கு நிதி தேவையென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சென்.ஜோண்ஸ்...

கண்ணாடிகளும் உடைந்து வீழ்ந்துள்ளன.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்றிரவு 9.00 மணிக்கு கல்லூரியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் முன்பக்க நுழைவாயிலில் இருந்து ஏனைய பகுதிகளை கண்காணிக்கச் சென்ற சமயம் மதிலால் பாய்ந்து உள்நுழைந்தவர்கள் கல்லூரியின் அலுவலகம் மீது கற்களை வீசித் தாக்கினர்.

இதன்போது பாதுகாப்பு ஊழியர் அவ்விடத்திற்கு வரவே அவர் மீதும் கற்களை வீசித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் நிகழ்த்தியவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்று கல்லூரிக்கு முன்பாக இருந்த குருவானவர் வீட்டின் மீதும் கற்களை வீசித் தாக்கிவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸாரிற்கு தகவல் கொடுக்கப்பட்டதனையடுத்து பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், விசாரணைகளையும் மேற்கொண்டனர். (பா)

## அமெரிக்க...

தீர்மானம் நிறைவேற்ற முயற்சித்து வருகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துக் கொண்டுள்ள காலம் மிகவும் முக்கியமானது.

அமெரிக்க அரசாங்கம் ஏதேனும் ஓர் காரணத்தின் அடிப்படையில் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்ய முயற்சித்து வருகிறது.

இலங்கைக்கு எதிராக செயற்படுவோர் தொடர்பில் அரசாங்கம் அவதானமாக இருக்க வேண்டும் அல்லது பாதக விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். அமெரிக்கா மனித உரிமை என்ற பெயரில் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குற்றச்செயலில்...

ஆணைக்குழுவில் ஒரு நிலைப்பாட்டை எடுப்பதில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு, அங்கு வரவிருக்கும் தேர்தல் ஒரு அழுத்தத்தை கொடுக்கக்கூடிய நிலை இருப்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அத்துடன், இந்திய மீனவர்கள் எந்த நிலையிலும், இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடிக்க அனுமதிக்க மாட்டோம்.

அமெரிக்காவுடன் உறவுகள் தொடர்ந்தும் வலுவான நிலையில் காணப்படுகிறது. இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தின் பின்னணியில் மறைகரங்கள் செயற்பட்டு வருகின்றன. எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிய கிண்ணத்தொடர்

## சங்கக்காரவின் சதத்தால் இலங்கையிடம் வீழ்ந்தது இந்தியா



ஆசிய கிண்ண போட்டித் தொடரில் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற பரபரப்பான போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களால் போராடி வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி, இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 264 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தவான் 94, ஹோலி 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் அஜந்த மென்டிஸ் 4, சேனநாயக்க 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய இலங்கை அணி குசால் பெரேரா 64, திரிமன்ன 38 ஓட்டங்களைப் பெற்று நல்ல தொடக்கத்தை அளித்தனர். பின்னர் தனித்து நின்று சதம் விளாசிய சங்ககாரவின் ஆட்டத்தால் இலங்கை அணி 49.2 ஓவர்களில் வெற்றி இலக்கை எட்டியது. சங்ககார 103 ஓட்டங்களை 12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் சமி, ஜடேஜா தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் வெற்றிக்கு பங்காற்றிய சங்கார தெரிவானார். இதன் மூலம் இலங்கை அணி இறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகியுள்ளன.

# உண்மை கண்டறியும் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்

## சர்வதேச சட்டத்தரணிகள் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உண்மையைக் கண்டறியும் பொறிமுறை உருவாக்கப்படுவதுடன், யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் சர்வதேச சட்டத்தரணிகள் பேரவையின் மனித உரிமை நிறுவகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என சர்வதேச சட்டத்தரணிகள் பேரவையின் இணைத் தலைவர் பார்நோயிஸ் ஹெலனா கென்னடி (Baroness Helena Kennedy) தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை நீதித்துறையினரால் உரிய தீர்வுகளை வழங்க முடியாத அநேக சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்ட முடியும் என அவர் கூறியுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்பதே தமது அமைப்பின் நிலைப்பாடு என அவர் தெரிவித்துள்ளார்.

நீதித்துறையின் சுயாதீனத் தன்மை, சர்வதேச சுயாதீன யுத்தக் குற்றச் செயல் விசாரணை போன்ற காரணிகளை உள்ளடக்கிய வகையில் இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் அமைய வேண்டுமென சட்டத்தரணிகள் பேரவையின் மனித உரிமைகள் நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுபான்மை சமூகத்தவர், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் மீதான தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட பாரியளவிலான மனிதப் புதைகுழிகள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கிரமமான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## ஆட்கடத்தல்காரர்கள் கைவிட்ட 65 இலங்கையர்கள் தத்தளிப்பு

(கொழும்பு)

நடுக்கடலில் கைவிடப்பட்ட 65 இலங்கையர்களை கொண்ட படகொன்று கடலில் மிதந்தவாறு அந்தமான் தீவுகளுக்கு அருகில் கரையொதுங்கியுள்ளதாக தெரியவருகிறது. வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக படகு மூலமாக ஆட்களை அழைத்துச் செல்லும் நபர்களினால் இவர்கள் நடுக்கடலில் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் இந்த இலங்கை பிரஜைகளிடம் இருந்து ஒரு இலட்சம் ரூபா முதல் மூன்று இலட்சம் ரூபா வரை அறவிட்டுள்ளனர். மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் இவர்கள் படகில் ஏறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

## 3500 கிராம சேவையாளர்களுக்கு எதிர்வரும் 6 இல் நியமனம்

(கொழும்பு)

திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 3500 கிராம சேவையாளர்களுக்கு நியமனம் எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் வழங்கப்படவுள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும் விசேட வைபவத்தில் ஜனாதிபதி புதிய கிராம சேவையாளர்களுக்கான நியமனத்தைக் கையளிக்கவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பி.அபேகோன் தெரிவித்தார்.

மேல் மற்றும் தென்மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் காலங் களில் புதிய அரச நியமனங்கள் வழங்குவது தொடர்பில் நில விய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அதன் போது எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த நியமனத்தை வழங்க முடிவு செய்ததாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய கிராம சேவகர்களின் பெயர் விபரங்கள் கடந்த வாரம வெளியிடப்பட்டிருந்தன. இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அமைச்சினால் தற்போது அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். புதிதாக நியமனம் பெறும் கிராம சேவையாளர்கள் வடக்கு கிழக்கு உட்பட வெற்றிடமுள்ள பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்திலும் காணாமற்போனோர் விசாரணை

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணையின் கிழக்கு மாகாணத்திற்கான முதலாம் அமர்வு இம்மாதம் மட்டக்களப்பில் நடத்தப்படும் என ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990 - 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுத்து வருகிறது. வடக்கு மாகாண கணக்கெடுப்புகள் ஓரளவுக்கு பூர்த்தியடைந்துள்ள நிலையில் தற்போது கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரையில் வாகரை - செங்கலடி ஆகிய நகரங்களில் பொதுமக்களுடன் நேரடியாக உரையாடி முறைப்பாடுகள் பெறப்படவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள ஆணைக் குழுவினர், ஆரம்பக் கட்டமாக மாவட்ட செயலாளர்களுடன் கலந்துரையாடுவர் என ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டப்ளியூ குணதாச தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 18 - 21 ஆம் திகதிகளில் வடக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் 440 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 14 - 17 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட விசாரணைகளில் 984 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நாடு முழுவதிலுமிருந்து மொத்தமாக 13700 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. காணமற் போனவர்களில் 9300 பொது மக்களும் 4300 பாதுகாப்புப் படையினரும் உள்ளடங்குகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் தனிப்பட்ட வைத்தியரை இலக்குவைத்து சூடு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட வைத்தியரான டாக்டர் எலியந்த வைட்டை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை எலியந்த வைட்டின் மோட்டார் கார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் சம்பவத்தில் மோட்டார் காருக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும், சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் டாக்டர் வைட் காரில் பயணம் செய்யவில்லையெனவும் அவரது சாரதி மட்டுமே காரில் பயணம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

மிரிஹான எதிரிசிங்க வீதியில் நேற்று அதிகாலை 4.30 அளவில் இந்தச் சம்பவம் இட்மபெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பிச் சென்றுள்ளனர். ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பெல்லன்வில விகாரையில் நடைபெறவுள்ள பூஜை வழிபாடுகளுக்கு தேவையான சில பொருட்களை டொக்டர் வைட்டின் தாயாரது வீட்டிலிருந்து எடுத்துச் செல்வதற்காக சாரதி காரில் சென்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சிவராத்திரிக்கு ஆலயம் சென்று திரும்பிய பெண் விபத்தில் பலி

சிவராத்திரி தினத்தில் ஆலயமொன்றிற்கு சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் மகனுடன் திரும்பிய வயோதிபப் பெண் ஒருவர் வீதி விபத்தில் சிக்கி படுகாயங்களுக்கு இலக்காகி சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கச்சாய் தெற்கு கொடிகாமப் பகுதியில் நேற்று மாலை 5 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முருகர் சரஸ்வதி (வயது - 72) என்ற வயோதிபப் பெண்ணே கச்சாய் அம்மன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டு வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருக்கையில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்து படுகாயங்களுக்குள்ளாகியுதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அங்கிருந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இரவு 10 மணிக்கு உயிரிழந்தார். (பா)

## தும்பிக்கை தடவியவரை ஏறிமிதித்தது யானை

(கொழும்பு)

உடவலவ தேசிய வனவிலங்கு சரணாலயத்திற்கு சென்றிருந்த வெளிநாட்டு பெண் சுற்றுலாப் பயணி காட்டு யானை தாக்கியத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மின்சார வேலிக்கு அந்த புறம் இருந்த யானைக்கு உணவு வழங்கி அவர் யானையின் தும்பிக்கையை தடவியுள்ளார். இதனையடுத்து யானை அந்த பெண்ணை தாக்கியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த வெளிநாட்டுப் பெண் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வந்திருந்த 37 வயதான செப்புலிம் கஸ்சேதோம என்ற பெண்ணே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

வனவிலங்கு சரணாலயத்தில் வாகனத்தில் சென்று கொண்டிருந்த இந்த பெண் எச்சரிக்கையையும் மீறி யானைக்கு உணவை கொடுத்து அதன் தும்பிக்கையை தடவியுள்ளார்.

யானை பெண்ணைத் தாக்கி விட்டு திரும்பிச் செல்லும் போது அந்த பெண் கீழே விழுந்துள்ளதுள்ளதுடன் அவரை யானை மிதித்துள்ளதாக கூறப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.